தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**19.11.2013**

**செம்பரம்பாக்கத்தில் 51 மி.மீ. மழைப் பதிவு**

திருவள்ளூர் மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை அதிகபட்சமாக செம்பரம்பாக்கத்தில் 51 மில்லிமீட்டர் மழை பதிவாகியுள்ளது. வங்கக்கடலில் உருவான காற்றழுத்தத் தாழ்வு நிலை புயலாக மாறி, சனிக்கிழமை மாலை ராமேஸ்வரம் அருகே கரையைக் கடந்தது. இதன் காரணமாக தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்தது. இதன் தொடர்ச்சியாக ஞாயிற்றுக்கிழமையும் திருவள்ளூர் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது.

மாவட்டத்தில் பதிவான மழை அளவு (மில்லிமீட்டரில்): பொன்னேரி 18, பள்ளிப்பட்டு 21, கும்மிடிப்பூண்டி 10, திருத்தணி 12, திருவள்ளூர் 16, பூந்தமல்லி 16, அம்பத்தூர் 26, பூண்டி 11, செம்பரம்பாக்கம் 51, சோழவரம் 13, தாமரைப்பாக்கம் 15, ஆர்.கே.பேட்டை 3, செங்குன்றம் 13.

செம்பரம்பாக்கம் ஏரியில் நீர்வரத்து அதிகரிப்பு... இந்நிலையில் பலத்த மழையின் காரணமாக செம்பரம்பாக்கம் ஏரியில் நீர்வரத்து அதிகரித்து நீர்மட்டம் உயர்ந்துள்ளது. சென்னையின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யும் முக்கிய ஏரிகளுள் ஒன்று செம்பரம்பாக்கம். இதன் மொத்த கொள்ளளவு 3645 கன அடி. உயரம் 21 அடி ஆகும். மழைக்கு முன்பு வரை ஏரியில் 9.72 அடி வரை தண்ணீர் இருந்தது. இதனிடையே குறைந்தக் காற்றழத்தத் தாழ்வு நிலை காரணமாக கடந்த இரண்டு நாள்களாக பெய்த மழையால் ஏரியின் நீர் வரத்து அதிகரித்துள்ளது. திங்கள்கிழமை காலை நிலவரப்படி, ஏரியின் நீர்வரத்து 651 கனஅடியாகவும், கொள்ளளவு 868 கன அடியாகவும், உயரம் 10.88 அடியாகவும் உயர்ந்தது.

**வங்கக் கடலில் புதிய காற்றழுத்தத் தாழ்வு பகுதி: இன்றும் மழை நீடிக்கும்**

அந்தமான் கடல் பகுதி அருகே திங்கள்கிழமை புதிய காற்றழுத்தத் தாழ்வு பகுதி உருவாகியுள்ளதால் தமிழகத்தில்  மழை நீடிக்கும் என சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

வங்கக் கடலில் உருவான காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் சனிக்கிழமையன்று கரையைக் கடந்தது.

இந்நிலையில் மத்திய வங்கக் கடலின் தென்கிழக்குப் பகுதியில் புதிய காற்றழுத்தத் தாழ்வு பகுதி உருவாகியுள்ளது. அது வலுவடைந்து, நகரும் திசையைப் பொருத்தே தமிழகத்துக்கு மழை வாய்ப்புள்ளதா என்பதைக் கணக்கிட முடியும் என்று வானிலை மையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வானிலை முன்னறிவிப்பு: தமிழகம் மற்றும் புதுச்சேரியின் பெரும்பாலான இடங்களில் இன்று மழை பெய்ய வாய்ப்புள்ளது. மாநிலத்தின் சில இடங்களில் கனமழை பெய்யக் கூடும்.

சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும்.
திங்கள்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):
சென்னை, செம்பரம்பாக்கம், குன்னூர் - 50, ஆரணி, செங்கோட்டை - 40,
மகாபலிபுரம், ஸ்ரீபெரும்புதூர், செங்கல்பட்டு, எண்ணூர்,   பூந்தமல்லி - 20.

**செம்பரம்பாக்கத்தில் 51 மி.மீ. மழை பதிவு**

திருவள்ளூர் மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை அதிகபட்சமாக செம்பரம்பாக்கத்தில் 51 மில்லிமீட்டர் மழை பதிவாகியுள்ளது.

வங்கக்கடலில் உருவான காற்றழுத்தத் தாழ்வு நிலை புயலாக மாறி, சனிக்கிழமை மாலை ராமேஸ்வரம் அருகே கரையைக் கடந்தது.

இதன் காரணமாக தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்தது.

இதன் தொடர்ச்சியாக ஞாயிற்றுக்கிழமையும் திருவள்ளூர் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது.

மாவட்டத்தில் பதிவான மழை அளவு (மில்லிமீட்டரில்):

பொன்னேரி 18, பள்ளிப்பட்டு 21, கும்மிடிப்பூண்டி 10, திருத்தணி 12, திருவள்ளூர் 16, பூந்தமல்லி 16, அம்பத்தூர் 26, பூண்டி 11, செம்பரம்பாக்கம் 51, சோழவரம் 13, தாமரைப்பாக்கம் 15, ஆர்.கே.பேட்டை 3, செங்குன்றம் 13.

செம்பரம்பாக்கம் ஏரியில் நீர்வரத்து அதிகரிப்பு...

இந்நிலையில் பலத்த மழையின் காரணமாக செம்பரம்பாக்கம் ஏரியில் நீர்வரத்து அதிகரித்து நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

சென்னையின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யும் முக்கிய ஏரிகளுள் ஒன்று செம்பரம்பாக்கம். இதன் மொத்த கொள்ளளவு 3645 கன அடி. உயரம் 21 அடி ஆகும்.

மழைக்கு முன்பு வரை ஏரியில் 9.72 அடி வரை தண்ணீர் இருந்தது. இதனிடையே குறைந்தக் காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக கடந்த இரண்டு நாள்களாக பெய்த மழையால் ஏரியின் நீர் வரத்து அதிகரித்துள்ளது.

திங்கள்கிழமை காலை நிலவரப்படி, ஏரியின் நீர்வரத்து 651 கனஅடியாகவும், கொள்ளளவு 868 கன அடியாகவும், உயரம் 10.88 அடியாகவும் உயர்ந்தது.

**போலி விதைகள்: நடவடிக்கை கோரி விவசாயிகள் மனு**

போலி மக்காச்சோள விதைகளை வழங்கி ஏமாற்றிய தனியார் விதை நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோவில்பட்டி சார் ஆட்சியரிடம் திங்கள்கிழமை மனு அளித்தனர்.

கோவில்பட்டி வருவாய் கோட்டத்துக்கு உள்பட்ட வெப்வால்தொத்தி கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் மதிமுக மாநில விவசாய அணி துணைச் செயலர் வரதராஜன் தலைமையில், சார் ஆட்சியரிடம் அளித்த மனு: விளாத்திகுளம் வட்டம், வெப்வால்தொத்தி வருவாய் கிராமத்தில் நாகம்பட்டி கிராமம் உள்ளது. இங்குள்ள நிலங்களில் மானாவாரி விவசாயம் மற்றும் தோட்டப் பாசன விவசாய நிலங்கள் உள்ளன.

இப்போது சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் நாகலாபுரத்தில் உள்ள தனியார் விதைக் கடையில் மக்காச்சோள விதைகளை விலைக்கு வாங்கி எங்களது நிலங்களில் ஊன்றினோம். விதை ஊன்றி 6 நாள்களில் அதன் முளைப்புத் திறன் வெளிப்படும்.

சுமார் 27 நாள்களாகியும் விதை முளைப்புத் திறன் காணப்படவில்லை. இந்நிறுவன மக்காச்சோள விதையை எங்கள் பகுதி விவசாயிகள் மட்டுமல்லாமல் சுற்று வட்டாரத்தில் உள்ள சங்கரலிங்கபுரம், ஸ்ரீரங்கபுரம், குருவார்பட்டி, ரெட்டிப்பட்டி போன்ற கிராம மக்களும் வாங்கி நிலங்களில் ஊன்றினர்.

எந்த ஊரிலும் விதை முளைக்கவில்லை. இதுகுறித்து விதையை வாங்கிய நாகலாபுரம் கடை உரிமையாளரிடம் கேட்டோம். அதற்கு அவர், விதை நிறுவனத்திடம் பேசி தீர்வு சொல்வதாகக் கூறினார்.

ஆனால் 45 நாள்களாகியும் எந்தவொரு பதிலும் கிடைக்கவில்லை. எனவே அந்த விதை நிறுவனத்திடம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டுத் தொகையை பெற்றுத் தர வேண்டும் என்றார் அவர்.

**அழிக்கப்படும் முந்திரி மரங்கள்: மாற்றுப் பயிருக்கு மாறும் விவசாயிகள்**

புயல் பாதிப்பு, வறட்சி போன்ற காரணத்தால் மகசூல் குறைந்து வரும் முந்திரி மரங்களை வெட்டி அகற்றிவிட்டு மாற்றுப் பயிர் செய்யும் முயற்சியில் விவசாயிகள்

ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கடலூர் மாவட்டத்தில் சுமார் 29 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் உள்ள முந்திரிக் காடுகளில் இருந்து ஆண்டுக்கு சுமார் 22 ஆயிரம் மெட்ரிக் டன் முந்திரிக் கொட்டை அறுவடை செய்யப்படுகிறது. குறிப்பாக பண்ருட்டி வட்டத்தில் உள்ள 16,900 ஹெக்டேர் நிலப்பரப்பில் உள்ள முந்திரிக் காடுகளில் இருந்து சுமார் 12 ஆயிரம் மெட்ரிக் டன் முந்திரிக் கொட்டை உற்பத்தி செய்யப்படுகிறது.

இதனால் பண்ருட்டிப் பகுதியில் முந்திரிப் பருப்புகளை பதப்படுத்தும் தொழிற்சாலைகளும், அதனைச் சார்ந்த தொழிற்சாலைகளும் அதிக அளவில் இருப்பதால் பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு ஆண்டு முழுவதும்

வேலைவாய்ப்பும், முந்திரி ஏற்றுமதி மூலம் கணிசமான அளவு அன்னியச்செலாவணி கிடைக்கிறது.

இந்நிலையில், கடந்த டிசம்பர் மாதம் 2011ஆம் ஆண்டு வீசிய தானே புயல் முந்திரி, பலா மரங்களை முற்றிலும் அழித்தது. பனி, மழை, வறட்சி என சிக்கல்களை எதிர்கொண்டு விவசாயிகள் தவித்தனர்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு பல்வேறு திட்டங்களை அறிவித்தது. இதில் புயலால் பாதிக்கப்பட்ட முந்திரி மரங்களை வெட்டி அகற்ற ஒரு ஹெக்டேருக்கு ரூ.25 ஆயிரமும், நடவு செய்ய வீரிய ஒட்டு ரகக் கன்றுகளும், ஒரு ஆண்டு பராமரிப்புச் செலவாக ஹெக்டேருக்கு ரூ.6,086 வழங்கியது.

ஆனால், புயலைத் தொடர்ந்து கடுமையான வறட்சி நிலவியதால் வழங்கப்பட்ட முந்திரிக் கன்றுகள் பயனற்றுப் போயின. தண்ணீர் வசதி இருந்த நிலத்தில் மட்டும் கன்றுகள் வளர்ந்தன. புயலில் தப்பிய மரங்களிலும் போதிய காய்ப்பில்லை.

முந்திரிக் கன்றுகளை நட்டு பலன் தர நீண்ட காலம் தேவைப்படும். அதுவரையில் தங்கள் குடும்பத் தேவைகள் மற்றும் சுப நிகழ்ச்சிகளை தள்ளிப் போடமுடியாத நிலைக்கு முந்திரி விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக முந்திரி மரங்களை வெட்டி அப்புறப்படுத்திவிட்டு மணிலா, மரவள்ளிக் கிழக்கு என மாற்றுப் பயிருக்கு மாறி வருகின்றனர். செம்மேடு, மேலிருப்பு, கருக்கை உள்ளிட்ட ஏராளமான கிராமப் பகுதியில் முந்திரி மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

இதுகுறித்து மேலிருப்பு கிராமத்தைச் சேர்ந்த முந்திரி விவசாயி மணிகண்டன் கூறியது:

தானே புயலால் முந்திரி, பலா மரங்கள் சேதம் அடைந்து விட்டதால் வருவாய் இன்றி தவித்து வருகின்றேன்.

குடும்பச் சுமையைக் கருதி 3 ஏக்கர் நிலத்தில் உள்ள முந்திரி மரங்களை வெட்டி அகற்றிவிட்டு மரவள்ளி மற்றும் மணிலாப் பயிர் செய்ய நிலத்தை சீர்செய்து வருகிறேன் என்றார்.

இதேபோல் இப்பகுதியில் உள்ள ஏராளமான விவசாயிகள் முந்திரி மரங்களை அழித்து மாற்றுப் பயிர் சாகுபடிக்கு மாறி வருகின்றனர்.

இந்நிலை நீடித்தால், கிராம பொருளாதாரமும், வேலை வாய்ப்பும், அன்னியச் செலாவணி இழப்பும் ஏற்படும் வாய்ப்புள்ளது.

எனவே மாவட்ட நிர்வாகமும், தோட்டக்கலைத் துறையும் தலையிட்டு உரிய தீர்வு காண வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பு.

**மாவட்டத்தில் பரவலாக மழை**

கடலூர் மாவட்டத்தில் திங்கள்கிழமை பகல் நேரத்தில் குளிர்ந்த காற்றுடன் மழைத் தூறல் இருந்ததால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

காற்றழுத்த தாழ்வுநிலை கரையைக் கடந்ததால், கடந்த சனிக்கிழமை கனமழை கொட்டியது.

மழை விட்டு வெயில் காயத் தொடங்கியதால் குடியிருப்புப் பகுதிகளில் தேங்கியிருந்த மழைநீர் மெல்ல, மெல்ல வடிந்து ஞாயிற்றுக்கிழமை சகஜ நிலைக்கு திரும்பியது. இந்நிலையில் திங்கள்கிழமை மாவட்டம் முழுவதும் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது.

காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை கடலூர், குறிஞ்சிப்பாடி, நெய்வேலி உள்ளிட்ட பகுதிகளில் லேசான மழைத் தூறல் இருந்து கொண்டே இருந்தது. தொடர்ந்து மழைத் தூறல் இருந்ததால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

**இன்று கோமாரி நோய் தடுப்பு விழிப்புணர்வு கிராமசபைக் கூட்டம்**

கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய் கோமாரி நோய் பரவுவதை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொதுமக்களிடையே இந்நோயின் தாக்குதல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் செவ்வாய்க்கிழமை (நவ.19) சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற உள்ளது.

இதில் சம்பந்தப்பட்ட ஊராட்சியைச் சேர்ந்த பொதுமக்கள் பங்கேற்றுப் பயனடைய வேண்டும். மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி வெளியிட்ட செய்திக்குறிப்பில் இதைத் தெரிவித்தார்.

**மர்ம நோயால் மாடுகள் சாவு: இழப்பீடு தொகை வழங்க கோரிக்கை**

கும்பகோணம் பகுதிகளில், மர்ம நோய் தாக்கி இறந்த மாடுகளுக்கு அரசு உடனடியாக இழப்பீடுத் தொகையை வழங்க வேண்டும் என கும்பகோணம் எம்எல்ஏ சாக்கோட்டை க. அன்பழகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

தமிழகத்தில் மனிதர்களுக்கு வரும் டெங்கு காய்ச்சல், சிக்கன்குனியா, பன்றிக்காய்ச்சல் மற்றும் மலேரியாவாக இருந்தாலும், கால்நடைகளை தாக்கும் மர்ம நோயாக இருந்தாலும் அவற்றை பரவாமல் தடுக்கவும், வந்த பின் சிகிச்சை அளிக்கவும் தற்போதுள்ள அரசால் இயலவில்லை. தற்போது கும்பகோணம் உள்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மர்மநோயால் கால்நடைகள் உயிரிழக்கின்றன. இரண்டு மாதங்களுக்கு முன்பே இந்த நோயின் அறிகுறி தென்பட்டது. அறிகுறி தென்பட்ட உடன் முன்னெச்சரிக்கை நடவடிக்கையை மேற்கொண்டு இருந்தால், கால்நடைகளின் உயிரிழப்பை தவிர்த்திருக்கலாம்.

இதுகுறித்து பத்திரிகைகள் அரசுக்கு தெரியப்படுத்தியும், அரசு தீவிர நடவடிக்கை எடுக்காத காரணத்தால், கும்பகோணம் தொகுதியில் கும்பகோணம் நகரம், தாராசுரம், சோழபுரம், சாக்கோட்டை, இன்னம்பூர், பழவாத்தான்கட்டளை, வாளபுரம், ஏரகரம் உள்ளிட்ட பகுதிகளில் மர்மநோயினால் சுமார் 500 மாடுகள் இறந்துள்ளன. இதுகுறித்து சட்டப்பேரவையில் பேசுவதற்கும் வாய்ப்பு தருவது இல்லை.

இந்த மர்ம நோய் மருத்துவத் துறைக்கு ஒரு சவாலாக உள்ளது. இந்த நோய் தமிழகத்தில் உள்ள கால்நடைகள் மூலம் பரவியதாக தெரியவில்லை. அண்டை மாநிலங்களிலிருந்து வாங்கப்பட்டு, பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்ட கால்நடைகளின் மூலமாக தான் பரவி உள்ளதாகவும், இந்நோயின் தன்மை, அறிகுறி, அதற்கு சிகிச்சை அளிப்பதில் சிக்கல் இருப்பதாகவும் மருத்துவர்கள் மற்றும் பொதுமக்கள் கருதுகின்றனர்.

எனவே தமிழக அரசு உடனடியாக இறந்த கால்நடைகளுக்கு இழப்பீடு தொகையாக ஒரு கால்நடைக்கு ரூ. 15 ஆயிரம் முதல் ரூ. 50 ஆயிரம் வரை வழங்க வேண்டும். மேலும் இருக்கின்ற கால்நடைகளை காப்பாற்ற அரசு தடுப்பூசி மற்றும் தகுந்த சிகிச்சையினை போர்க்கால அடிப்படையில் அளிக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

**கொப்பரை கழிவுகளை அப்புறப்படுத்த வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்**

சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்தும் கொப்பரைக் கழிவுகளை உடனடியாக பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்த வலியுறுத்தி தஞ்சாவூர் ஈஸ்வரி நகரில் உள்ள மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலகம் முன் பேராவூரணி பகுதி மக்கள் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

பேராவூரணி சட்டப்பேரவைத் தொகுதிக்கு உள்பட்ட புனல்வாசல், கொன்னைக்காடு, குருவிக்கரம்பை, துறவிக்காடு, செருவாவிடுதி, திருச்சிற்றம்பலம் உள்ளிட்ட பகுதிகளைச் சார்ந்த ஏராளமான தென்னை விவசாயிகள் கொப்பரை தயாரிக்கும் தொழில் மேற்கொண்டு வருகின்றனர்.

கொப்பரை கழிவுகள் அந்தந்த பகுதியிலேயே கொட்டப்படுவதால் மலைபோல் குவிந்துவிடுகின்றன.

இதனால், கொசு உற்பத்தி அதிகமாவதுடன், குடியிருப்புகளில் வசிப்போர் டெங்கு, மலேரியா காய்ச்சல் உள்ளிட்ட நோய்களுக்கு ஆளாகின்றனர். மேலும், இந்த வாடை காரணமாக விஷ ஜந்துகளும் அதிக அளவில் வருகின்றன. இதன் காரணமாக அப்பகுதியில் வசிப்போர் அச்சத்துக்கு ஆளாகின்றனர்.

எனவே, சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் கொப்பரைக் கழிவுகளைக் கொட்டுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படாத வகையில் பாதுகாப்பான முறையில் கொப்பரைக் கழிவுகளை அப்புறப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில், சேதுபாவாசத்திரம் ஒன்றியக் குழு உறுப்பினர் ஏ. செல்வம் தலைமையில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## கரும்புக்கு டன்னுக்கு ரூ. 4,000 உயர்த்த வலியுறுத்தி ஆட்சியரிடம் விவசாயிகள் மனு

சர்க்கரை ஆலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் கரும்பு கொள்முதல் விலையை டன்னுக்கு ரூ. 4,000 ஆக உயர்த்த வலியுறுத்தி தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரிடம் கரும்பு விவசாயிகள் திங்கள்கிழமை மனு அளித்தனர்.

மாவட்ட ஆட்சியரகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் என். சுப்பையனிடம் தஞ்சாவூர் மாவட்ட குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் எஸ். ராமநாதன் தலைமையில் பலர் அளித்த மனு:

2013 - 14 ஆம் ஆண்டு கரும்பு அரவை பருவம் தொடங்கிவிட்ட நிலையில் மத்திய அரசு விலை அறிவித்த பிறகும் மாநில அரசு ஆதார விலையை அறிவிக்காமல் மௌனம் காத்து வருகிறது.

இப்போது, கரும்பு டன்னுக்கு ரூ. 2,150 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், கரும்புக்கு உரிய இடுபொருள்கள், ஆள்கள் கூலி, வெட்டுக் கூலி ஆகியவை அதிகரித்துவிட்டன. இதை கருத்தில் கொண்டு டன்னுக்கு ரூ. 4,000 வீதம் விலை அறிவிக்க வேண்டும்.

ஆலை கட்டுவதற்காக விவசாயிகள் பங்குத் தொகையாக ஒவ்வொருவரும் ரூ. 1,000 கொடுத்துள்ளனர். 36 ஆண்டுகளாக பங்குதாரர்களுக்கு லாபத்தில் பங்கு கொடுக்கவில்லை. பேரவைக் கூட்டம் நடைபெறும்போது பங்குதாரர்கள் ஒவ்வொருவருக்கும் 2 கிலோ சர்க்கரை வழங்கப்படும். கடந்த ஆண்டு அதுவும் வழங்கப்படவில்லை. அடுத்தக் கூட்டத்தில் சர்க்கரை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.

### மக்காச்சோள உற்பத்திக்கு தொழில்நுட்பப் பயிற்சி

பெரம்பலூர் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் நவ. 21ம் தேதி நடைபெற உள்ள மக்காச்

சோளத்தில் மேம்படுத்தப்பட்ட உற்பத்தி தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சி பெற அழைப்பு விடுத்துள்ளார் மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் பி. வெங்கடேசன்.

இதுகுறித்து அவர் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரம் ஹேன்ஸ் ரோவர் வேளாண்

அறிவியல் மையம் சார்பில் விவசாயிகளுக்கு நவ. 21 காலை 10 மணி முதல் மதியம்

1 மணி வரை இந்த பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இதில் உரமிடுதல், நீர் நிர்வாகம், நோய் மற்றும் பூச்சி நிர்வாகம் குறித்து காணொலி காட்சி மற்றும் செயல் விளக்கங்கள் மூலம் 20 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

பங்கேற்க விரும்புவோர் நேரில் அல்லது 04328-293592, 293251, 8939003569 ஆகிய எண்களில் காலை 9.30 மணி முதல், மாலை 5 மணிக்குள் தொடர்பு கொண்டு தங்களது பெயரைப் பதிவு செய்யலாம்.

**பெரம்பலூர் மாவட்டத்தில் பரவலாக மழை**

பெரம்பலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் திங்கள்கிழமை பரவலான மழை பெய்தது.

பெரம்பலூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தவறிவிட்ட நிலையில் வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக, கடந்த 16-ம் தேதி அதிகாலை முதல் இரவு வரை பரவலான மழை பெய்தது.

கார்த்திகை தீபத்தன்று வெயிலுடன் இதமான தட்ப வெப்பநிலை காணப்பட்டது. மாவட்டத்தில் திங்கள்கிழமை மதியம் 12.30 மணி முதல் மாலை வரை பரவலான மழை பெய்தது. சனிக்கிழமை காலை 8 மணி நிலவரப்படி பெய்த மழையளவு (மில்லி மீட்டரில்): பெரம்பலூர் - 71.5, வெண்பாவூர்- 80, தழுதாழை- 70, பாடாலூர் -9, செட்டிக்குளம்- 84 என, மாவட்டம் முழுவதும் 377.50 மில்லி மீட்டரும், சராசரியாக 75.5 மி.மீட்டரும் மழை பெய்தது.

மாவட்டத்தின் சராசரி மழையைவிட, நிகழாண்டு மழை குறைவாகப் பெய்துள்ளது. தற்போதைய மழையால் மாவட்டத்தில் உள்ள ஏரி, குளம், குட்டை உள்ளிட்ட நீர் நிலைகளில் மழைநீர் இல்லை. அதேபோல, கோனேரி ஆறு, சுவேத நதி, கல்லாறு, சின்னாறு, வெள்ளாறு, மருதையாறு ஆகியவற்றில் வெள்ளப் பெருக்கிற்கு வழியின்றி உள்ளது.

**கோமாரி நோய் விழிப்புணர்வு: இன்று சிறப்பு கிராம சபைக் கூட்டம்**

கோமாரி நோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த சிறப்பு கிராம சபைக் கூட்டம் நாமக்கல் மாவட்டத்திலுள்ள 322 ஊராட்சிகளிலும் செவ்வாய்க்கிழமை (நவ.19) நடைபெற உள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கால்நடைகளுக்கு பாதம், வாய்ப் பகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்தும் கோமாரி நோயைத் தடுப்பது குறித்து பொதுமக்கள், விவசாயிகளிடையே பல்வேறு கருத்துகள் தெரிவிக்கப்படுகின்றன. மேலும், 4 வயதுடைய கன்றுகள் தவிர அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி போடவும், கோமாரி நோய் தாக்கிய கால்நடைகளைக் கண்டறிந்து உடனடியாக தனிமைப்படுத்தி சிகிச்சை அளிக்கவும், நோய் தாக்கிய கால்நடைகளிடம் இருந்து மாதிரிப் பொருள்கள் சேகரித்து ஆய்வுக்காக அனுப்பவும், நோய் பாதிக்கப்பட்ட கால்நடைகளின் வாய், கால்களை மருந்துகளை கொண்டு சுத்தம் செய்து வேப்ப எண்ணெய் தடவவும், நோய் தாக்கிய கால்நடைகளை பராமரிப்பவர் இதர கால்நடைகளை அணுகாமலிருக்கவும், 10 சத சலவை சோடா கொண்டு தொழுவம் மற்றும் சுற்றுப்புறங்களைச் சுத்தம் செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட தகவல்கள் கால்நடை மருத்துவர்கள் மூலம் தெரிவிக்கப்பட உள்ளன.

அந்தந்த ஊராட்சிக்கு உள்பட்ட அனைத்து கால்நடை வளர்ப்போர், பொதுமக்கள் இந்த கிராம சபைக் கூட்டத்தில் பங்கேற்று பயன் பெற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சொட்டு நீர்ப் பாசன விளைநிலம்: தோட்டக்கலை ஆணையர் ஆய்வு**

ஒசூர் பகுதியில் 100 சத மானிய விலையில் சொட்டு நீர்ப் பாசனம் அமைக்கப்பட்ட விளைநிலங்களை தோட்டக் கலைத் துறை ஆணையர் சத்திய பிரதா சாகு திங்கள்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தேசியத் தோட்டக் கலைத் துறை இயக்கம், தேசிய ஒருங்கிணைந்த வேளாண்மை அபிவிருத்தி திட்டம், தேசிய நுண்ணீர்ப் பாசன இயக்கம் ஆகியவை சார்பில், 100 சத மானியத்தில் சொட்டு நீர்ப் பாசனத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இந்த திட்டத்தின் கீழ், சொட்டு நீர்ப் பாசனத்தில் உருளைக் கிழங்கு சாகுபடி செய்த கட்டூர் கிராமத்தை தோட்டக் கலைத் துறை ஆணையர் ஆய்வு செய்தார். மேலும், தோட்டக் கலைத் துறை சார்பில் செயல்படுத்தப்படும் பசுமைக் குடில், உயர்தொழில் நுட்ப முறையில் செயல்படுத்தப்படும் ஜெர்பரா, ரோஜா, கார்னேசன் வயல்களைப் பார்வையிட்டார். தளி, கொத்தனூர், எலுவப்பள்ளி, பூனப்பள்ளி, பேளகொண்டப்பள்ளி ஆகிய கிராமங்களில் சாகுபடி செய்யும் விளைநிலங்களையும் அவர் நேரில் பார்வையிட்டார். ஆய்வின் போது, கிருஷ்ணகிரி மாவட்ட தோட்டக் கலைத் துறை இயக்குநர் பெரியசாமி, துணை இயக்குநர் காளியப்பன், உதவி இயக்குநர்கள் உடனிருந்தனர்.

**கோமாரி நோய்த் தாக்குதல்: மாவட்டத்தில் கால்நடைச் சந்தைகளுக்குத் தடை**

கோமாரி நோய்த் தாக்குதலைத் தவிர்க்கும் நோக்கில், திருவண்ணாமலை மாவட்டம் முழுவதும் கால்நடைச் சந்தைகளுக்குத் தடை விதித்து மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் உத்தரவிட்டுள்ளார்.

மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்கள், கிராம ஊராட்சிகள் என மாவட்டம் முழுவதும் எந்தவொரு பகுதியிலும் மறு உத்தரவு வரும் வரை கால்நடைச் சந்தைகளை நடத்தக் கூடாது. கோமாரி நோய்த் தாக்குதல் மற்றும் அதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து பொதுமக்களுக்கு விளக்கும் வகையில் செவ்வாய்க்கிழமை மாவட்டத்தில் உள்ள 860 கிராம ஊராட்சிகளிலும், சிறப்பு

கிராம சபைக் கூட்டங்களை நடத்தவும் ஊராட்சித் தலைவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் உத்தரவிட்டுள்ளார்.

கோமாரி நோய்த் தாக்குதலுக்குண்டான கால்நடைகளை உடனே தனிமைப்படுத்த வேண்டும். உடனடியாக அந்த கால்நடைக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டும். கோமாரி நோய்த் தாக்குதலைத் தவிர்க்க 4 மாத கன்றுகள் நீங்கலாக அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி போடப்பட வேண்டும். சினை மாடுகளுக்கும் தடுப்பூசி போடலாம் என்று மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் விவசாயிகளை கேட்டுக்கொண்டுள்ளார்.

**செங்கம் சந்தையில் வெளியூர் மாடுகள் விற்கத் தடை: பேரூராட்சி செயல் அலுவலர் எச்சரிக்கை**

செங்கத்தில் நடைபெறும் மாட்டுச்சந்தையில் வெளியூர் மாடுகளை விற்க தடை விதிக்கப்பட்டுள்ளதாக பேரூராட்சி செயல் அலுவலர் மோகன்ராஜ் திங்கள்கிழமை தெரிவித்தார்.

செங்கம் பேரூராட்சிக்கு உள்பட்ட புதிய பஸ் நிலையம் அருகில் சந்தை மைதானம் உள்ளது. அதில் வாரத்தில் ஒருநாள் புதன்கிழமையன்று மாட்டுச் சந்தையும், ஞாயிற்றுக்கிழமையன்று ஆட்டுச்சந்தையும் நடைபெறும். மாட்டுச் சந்தையில் பல்வேறு ஊர்களில் இருந்து மாட்டு வியாபாரிகள் மாடுகளை வாங்கி வந்தும் லாரி மற்றும் மினி லாரிகளில் ஏற்றிவந்தும் விற்பனை செய்வார்கள். தற்போது தமிழகத்தில் பரவிவரும் கோமாரி நோயால் மாடுகளின் இறப்பு அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக வெளியூர் மற்றும் வெளிமாநிலங்களில் இருந்து மாடுகளை ஏற்றி வந்து செங்கம் சந்தையில் விற்பனை செய்யக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் செங்கம் பேரூராட்சி சார்பில் பேரூராட்சிக்கு உள்பட்ட 18 வார்டுகளிலும் மாடுகள் முறையாக வளர்க்கப்படுகிறதா என பேரூராட்சி பணியாளர்கள் ஆய்வு செய்து வருகின்றனர். மேலும் மாடுவளர்ப்பவர்களிடம் முறையாக தடுப்பூசி மற்றும் கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளதா எனவும் ஆய்வு செய்து வருகின்றனர். மாடுகளுக்கு கோமாரி நோய் தாக்கப்பட்டிருப்பின் உடனடியாக பேரூராட்சி நிர்வாகத்துக்கு தகவல் தெரிவித்தால், கால்நடை மருத்துவர்களை அனுப்பிவைத்து சிகிச்சை அளிக்கப்படும் என பேரூராட்சி செயல் அலுவலர் மோகன்ராஜ் தெரிவித்தார்.

## இன்று கோமாரி நோய் தடுப்பு திட்ட சிறப்பு கிராம சபைக் கூட்டம்

கோவை மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கிராம ஊராட்சிகளிலும் கோமாரி நோய்த் தடுப்பு திட்டம் தொடர்பான சிறப்பு கிராம சபைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை (நவ.19) நடைபெற உள்ளது.

கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோய், கால் மற்றும் வாய் நோய் குறித்து ஊராட்சிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை தொடர்பாக கால்நடை வளர்ப்போருக்கு அறிவுரை வழங்கப்பட உள்ளது. அனைத்துக் கிராம ஊராட்சிகளிலும் நவம்பர் 19-ஆம் தேதி காலை 11 மணிக்கு சிறப்பு கிராம சபைக் கூட்டம் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 67.12 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 67.12 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,651 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 500 கன அடி நீரும், வாய்க்காலில் 1,200 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர்இருப்பு 9.79 டி.எம்.சி.

## குன்னூரில் பலத்த மழை

குன்னூரில் 2 நாள்களாக தொடர்ந்து மழை பெய்துக் கொண்டிருப்பதால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

குன்னூரில் வழக்கமாக பெய்ய வேண்டிய  தென்மேற்கு பருவமழை பொய்த்துப் போனது. இந் நிலையில் கடந்த 2 தினங்களாக குன்னூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ளப் பகுதிகளில்  பலத்த மழைப் பெய்து வருகிறது. கடும் குளிரும் நிலவுவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

**நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.6 கோடி ஒதுக்கீடு**

தேனி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கம்பம் நீர்வடிப் பகுதியின் மேம்பாட்டுக்கு ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் கோ.சுந்தரம் கூறியது: பாசன நீர் சேமிப்பு, தடுப்பணை மற்றும் கம்பிவலை தடுப்பணை அமைத்தல், சம உயர வரப்புகள் அமைத்தல், வேளாண்மை சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்காக கம்பம் நீர்வடிப் பகுதிகளின் மேம்பாட்டுக்கு ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு ரூ.6 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கம்பம், உத்தமபுரம், க.புதுப்பட்டி ஆகிய நீர்வடிப் பகுதிகளில் 5,070 ஹெக்டேர் பரப்பளவில் உள்ள விவசாய நிலங்கள் பயனடையும் வகையில் இந்தத் திட்டம் தொடர்ந்து 7 ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படும். நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்த வேளாண்மைத் துறை சார்பில் தற்போது விவசாயிகள் குழு அமைக்கப்பட்டு வருகிறது என்றார்.

**கால்நடைகளின் அவசர மருத்துவ உதவிக்கு...**

கால்நடைகளின் அவசர மருத்துவ உதவிக்கு கால்நடைப் பராமரிப்புத் துறை அதிகாரிகளை தொடர்பு கொள்ள அவர்களது செல்போன் எண்களை மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: கால்நடைகளுக்கு அவசர மருத்துவ உதவிக்கு அருகில் உள்ள கால்நடை மருத்துவமனை, மருந்தகங்களைத் தொடர்பு கொள்ளலாம். மேலும் அவசர மருத்துவ உதவிக்கு அணுக வேண்டிய செல்போன் எண்கள்: காஞ்சிபுரம் மண்டல கால்நடைப் பராமரிப்புத் துறை இணை இயக்குநர் - 94450 01130, கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு உதவி இயக்குநர் - 94440 42787, 94457 72277, 94450 32605, கால்நடைப் பராமரிப்புத் துறை உதவி இயக்குநர்கள் மதுராந்தகம் - 94450 01155, செங்கல்பட்டு - 98418 76993, காஞ்சிபுரம் 98849 94294.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**19.11.2013**

## ஆந்திர வரத்து அதிகரிப்பால் மிளகாய் விலை கடும் வீழ்ச்சி விவசாயிகளுக்கு பாதிப்பு

பழநி : ஆந்திராவில் இருந்து வரத்து அதிகமாக இருப்பதால், உள்ளூரில் பச்சை மிளகாய் விலை கடும் வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.பருவமழையை நம்பி, பழநி அருகே உள்ள பாப்பம்பட்டி, அய்யம்பாளையம், லட்சலப்பட்டி, ஆர்.வாடிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில், விவசாயிகள் சம்பா மிளகாய் சாகுபடி செய்துள்ளனர். எதிர்பார்த்த அளவு மழையில்லாததால், விளைச்சல் பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால், பச்சை மிளகாய் வரத்து குறைந்து, மார்க்கெட்டில் கிலோ ரூ.50 முதல் 60 வரை விற்பனையானது. தற்போது, ஆந்திரா மிளகாய் வரத்து அதிகரித்துள்ளதால், உள்ளூர் மிளகாய் கிலோ ரூ.16 முதல் 20 வரை விலை வீழ்ச்சியடைந்துள்ளது. விவசாயி ஆர். சீனிவாசன் கூறுகையில், ""மிளகாய் நாற்று ஒன்று 60 பைசாவுக்கு வாங்கி,

5 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்தோம். லாரியில் தண்ணீர் வாங்கி, வயலுக்கு பாய்ச்சி வந்தோம். இதற்கு ஒரு லட்ச ரூபாய் வரை செலவானது. ஒரு ஏக்கருக்கு 2 டன் மிளகாய் விளைச்சல் கிடைக்கும். தண்ணீர் பற்றாக்குறையால், ஒரு டன் தான் கிடைக்கிறது. வெளிமாநில மிளகாய் வரத்தால், உள்ளூர் மிளகாய் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால் நஷ்டம் ஏற்பட்டுள்ளது," என்றார்.

### கொடைக்கானலில் மழையால் குடிநீர் ஆதாரங்களுக்கு நீர்வரத்து

கொடைக்கானல் : கொடைக்கானலில் பெய்யும் தொடர் மழையால் குடிநீர் ஆதாரமான மனோரத்தினம் சோலை அணை, நகராட்சி நீர்த்தேக்கம் ஆகியவற்றின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. நேற்று முன்தினம் கடும் மேகமூட்டம் நிலவிய கொடைக்கானலில், நேற்று காலை 6 மணி முதல் நல்ல வெயில் அடித்தது. காலை 8.30 மணிக்கு மேகங்கள் சூழ துவங்கின. பகல் 1 மணி, 2.30 மணி என விட்டுவிட்டு சாரல் மழை பெய்தது.

மழை காரணமாக, நகராட்சி நீர்த்தேக்கத்தில் மழைக்கு முன் 7 அடியாக இருந்த நீர்மட்டம், 11 அடியாக(மொத்தம் 20 அடி) உயர்ந்தது. மனோரத்தினம் சோலை அணையில், மழைக்கு முன் 15 அடியாக இருந்த நீர்மட்டம், 19 அடியாக(மொத்தம் 36 அடி) உயர்ந்தது. கொடைக்கானல் ஏரியின் நீர்மட்டமும் உயர்ந்துள்ளது.சுற்றுலா பயணிகளின் வருகை, சொற்ப அளவிலேயே இருந்தது. மழை காரணமாக, வத்தலக்குண்டு ரோடு சேதமடைந்துள்ளது. வாகன ஓட்டிகள் சிரமத்திற்குள்ளாகினர்.

### காய்ந்த தென்னை மரங்களுக்கு நஷ்ட ஈடு வழங்க கோரிக்கை

குஜிலியம்பாறை : குஜிலியம்பாறை ஒன்றிய பகுதியில், காய்ந்து போன தென்னை மரங்களுக்கு, நஷ்ட ஈடு வழங்க கோரி விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மாவட்டத்தின் வறட்சி பகுதியான குஜிலியம்பாறை ஒன்றிய பகுதியில், கடந்த சில ஆண்டுகளாக போதிய மழை இல்லாததால், விவசாயம் பொய்த்துப்போனது. விவசாய நிலங்களில் இருந்த ஏராளமான தென்னை மரங்கள், தொடர்ந்து காய்ந்தன. கால்நடைகளை கூட வளர்க்க முடியாமல், விவசாயிகள் மிகுந்த அவதிப்பட்டு வருகின்றனர்.

காய்ந்து போன தென்னை மரங்கள் குறித்து, வேளாண்மைத்துறையினர் மற்றும் வி.ஏ.ஓ.,க்கள் கணக்கு எடுத்துள்ளனர். ஆனால் இதுவரை நஷ்ட ஈடு வழங்கவில்லை. இந்நிலையில், தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில், காய்ந்து

போன தென்னை மரங்களுக்கு உடனடியாக நஷ்ட ஈடு வழங்க கோரி, குஜிலியம்பாறை வேளாண் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்பாட்டத்திற்கு விவசாயிகள் சங்க ஒன்றிய செயலாளர் தங்கவேல் தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் ராஜரத்தினம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மழைக்கால நோய்களை தடுக்க கால்நடை பல்கலை அறிவுறுத்தல்

திண்டுக்கல் : மழை காலங்களில், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளுக்கு துள்ளுமாரி, ஆட்டுக்கொல்லி, நீலநாக்கு நோய்கள் ஏற்படுகின்றன. இதை தடுக்க கால்நடை பல்கலை அதிகாரிகள் ஆலோசனை தெரிவித்துள்ளனர். அவர்கள் கூறியதாவது: துள்ளுமாரி நோய் தாக்கிய ஆடு குட்டிகள் எவ்வித அறிகுறி இல்லாமல், இறந்துவிடும். சளியுடன் கூடிய கழிச்சல் ஏற்படும். தீவனம் உட்கொள்ளாது. கண்களில் பிதுக்கம், வலிப்பு ஏற்படும். இந்நோயை தடுக்க புதிதாக முளைத்த புற்களில் கால்நடைகளை மேய்க்க கூடாது. தடுப்பூசி போடவேண்டும்.

ஆட்கொல்லி நோய் தாக்கிய ஆடுகளுக்கு தொடர் காய்ச்சல் இருக்கும். மூக்கில் சளி வடிந்து உறைந்து காணப்படும். அதிக அளவில் உமிழ்நீர் சுரக்கும். இந்நோயை தடுக்க, ஆடு கட்டி போடும் இடம் தூய்மையாக இருக்கவேண்டும். நீலநாக்கு நோய் தாக்கிய ஆடுகள் தீவனம் உட்கொள்ளாது. அதிக காய்ச்சல் இருக்கும். வீக்கத்துடன் முகம் சிவந்து காணப்படும். நுரையுடன் கூடிய உமிழ்நீர் வாய், மூக்கு வழியாக ஒழுகும். கால் குளம்பில் கருஞ்சிவப்பு புண்கள் ஏற்படும். நாக்கு நீலமாக மாறும். நோயை தடுக்க தடுப்பூசி போடவேண்டும்.

புண்களை ஒரு சதவீத பொட்டாசியம் பர்மாங்கனேட் கரைசல் அல்லது சாதாரண உப்பு கØரால் மூலம் நன்றாக கழுவ வேண்டும். வாய் புண்ணுக்கு போரிக் அமில பவுடருடன் வேப்ப எண்ணெய் கலந்து தடவலாம், என்றார்.

## கோமாரி நோய் தாக்குதல் கறவை மாடுகள் பலி

குஜிலியம்பாறை : கூம்பூர் ஊராட்சி பகுதியில், கோமாரி நோய் தாக்குதலால், கால்நடைகள் அடுத்தடுத்து இறக்கின்றன. வறட்சியால் விவசாயிகள் கால்நடை வளர்ப்பு தொழிலை நம்பியுள்ளனர். கால்நடை வளர்ப்பிலும், கடந்த ஒரு மாதமாக பெரும் தொய்வு ஏற்பட்டுள்ளது.

நேற்று காலை, பாம்புலுபட்டியை சேர்ந்த கருப்பையா என்பவரது, எருமை மாடு, கோமாரி நோய் தாக்குதலால் இறந்தது. நான்கு நாட்களாக, நாக்கில் புண் ஏற்பட்டு தீவனம் உட்கொள்ளாமல் இருந்தது. போதிய சிகிச்சைக்கு பின்னும் காப் பாற்றமுடியாமல் இறந்தது.

இதே போல், நாகுல்பட்டியை சேர்ந்த பன்னீர் என்பவரது எருமை மாடு, செல்வம் என்பவரின் இரண்டு மாடுகள், பாம்புலுபட்டி காலனியை சேர்ந்த ராமனின் மாடு ஆகியவை கோமாரி நோய் தாக்குதலால் அடுத்தடுத்து இறந்தது.

கூம்பூர் ஊராட்சி பகுதியில், கோமாரி நோய் தாக்குதலால் விவசாயிகள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

விவசாயி கருப்பையா கூறுகையில், ""கோமாரி நோய் தாக்குதலால் கறவை மாடுகள் தொடர்ந்து இறக்கின்றன. போதிய மருத்துவ வசதிகளை செய்ய கால்நடைத்துறையினர் முன்வர வேண்டும்," என்றார்.

## வெற்றிலை கொடியில் நோய் தாக்குதலால் பாதிப்பு : தோட்டக்கலைத்துறை நடவடிக்கை தேவை

தேவதானப்பட்டி : பெரியகுளம் தாலுகாவில் வெற்றிலைக் கொடியில் இலை சுருட்டை, வெள்ளை பூச்சி தாக்குதலால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அழிந்து வரும் விவசாயத்தை காப்பாற்ற தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பணப்பயிராக கருதப்படும் வெற்றிலைக் கொடி சாகுபடி தொழில், பெரியகுளம் தாலுகா, ஜெயமங்கலம், மேல்மங்கலம், வடுகபட்டி, சில்வார்பட்டி, வைத்தியநாதபுரம், பெரியகுளம், கெங்குவார்பட்டி, ஜி.கல்லுப்பட்டி மற்றும் சின்னமனூர், கம்பம், மார்க்கையன்கோட்டை, போடி உட்பட மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

ஆண்டுதோறும் அக்டோபர் மாதத்தில், அகத்தி விதை விதைப்பு பணி நடக்கும். தொடர்ந்து நவம்பர், டிசம்பர் மாதங்களில் வெற்றிலைக் கொடி நடவு செய்யப்படும். தொடர்ந்து பராமரித்து வந்தால், 6 மாதங்கள் கழித்து பலனுக்கு வரும். நோய் தாக்குதல் இல்லாமல் இருந்தால், 3 ஆண்டுகளுக்கு இதன் பயனை

அனுபவிக்க முடியும்.

ஒரு ஏக்கருக்கு 5லட்சம் ரூபாய் வரை செலவாகிறது. மாவட்டத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பத்தினர், இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். பெரியகுளம் பகுதியில் 500 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலத்தில் வெற்றிலை கொடி பயிரிடப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக வெற்றிலைக் கொடியில் நோய் தாக்குதல் அதிகரித்து வருகிறது. இலை சுருட்டை, வெள்ளை பூச்சி, வாடல் நோய், வேர் அழுகல் போன்ற பல்வேறு நோய்கள் தாக்குகிறது. தொடர்ந்து வெற்றிலைத் தொழில் பாதிக்கப்பட்டது. இதனால், பெரியகுளம் தாலுகாவில் பல குடும்பங்கள் வேலை இழந்து திருப்பூர், கோவை, கேரளா போன்ற ஊர்களுக்கு சென்று விட்டனர். இந்நிலையில், பெரியகுளம் தாலுகா கெங்குவார்பட்டியில் பயிரிடப்பட்டுள்ள வெற்றிலைக் கொடியில் வெள்ளை பூச்சி, இலை சுருட்டை நோய் தாக்குதல் ஏற்பட்டு கொடிகள் காய்ந்து வருகின்றன. இதனால் இப்பகுதி விவசாயிகள் கடுமையான பொருளாதார இழப்பு ஏற்பட்டு சிரமப்பட்டு வருகின்றனர். நோய் தாக்குதலை தடுக்க தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## உரம், மருந்துகள் தர பரிசோதனை தேவை: விவசாயிகள் கோரிக்கை

தாண்டிக்குடி : மலைப்பகுதியில் பயிரிடப்படும் பல்வேறு வகையான பயிர்களுக்கு இடப்படும் உரம், மருந்துகள் தர சோதனைக்கு உட்படுத்தவேண்டும், என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொடைக்கானல் மேல்மலை , தாண்டிக்குடி கீழ்மலை பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் மலை விவசாயம் மற்றும் சிறு, குறு விவசாயங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்நிலையில் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் ரசாயான உரம், மருந்துகள் பயன்படுத்திகின்றனர்.

விவசாயிகள் பயன்படுத்தும் மருந்து, உரங்களின் பலன்கள் பயிர்களுக்கு கிடைப்பதில்லை. மாறாக எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்காமல் ஏமாற்றமடையும்

நிலை உள்ளது. உரம், மருந்து வகைகளில் போலிகள் அதிகம் உள்ளது. இதை கண்டறிய முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர். உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் பயிர்களுக்கு அளிக்கும் உர, மருந்துகளின் உண்மை நில சமீப காலமாக கேள்விக்குறியாக உள்ளது.
பருவ மழை, பாதிப்பு, சீதோஷ்ண நிலை மாற்றங்களால் பாதித்துள்ள விவசாயிகளுக்கு இந்நிலை மேலும் சரிவை ஏற்படுத்தியுள்ளது. மாவட்ட விவசாயத்துறை அதிகாரிகள் விவசாயிகளுக்கு வினியோகிக்கும் உரம், மருந்துகளை பரிசோதனைக்கு உட்படுத்தவேண்டும், என மலைப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கோமாரி நோய் குறித்து விழிப்புணர்வுக்கு இன்று, சிறப்பு கிராம சபை கூட்டம்

தேனி : கோமாரி நோய் குறித்தும், அதை தடுக்கும் முறை குறித்தும், கிராம மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த, இன்று (நவ.19)சிறப்பு கிராம சபை கூட்டம் நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் கால்நடைகளுக்கு கோமாரி என்ற வாய்சப்பை நோய் வேகமாக பரவிவருகிறது. நோய் பாதித்த கால்நடைகளின் பாதக் குளம்புகளில் புண் ஏற்பட்டு, நடக்க முடியாத நிலைக்கு சென்று விடுகின்றன. அதே போல், வாயினுள் நாக்கு முழுவதும் புண்ணாகி, தோல் உரிந்து விடுகிறது. இதனால், உணவு உட்கொள்ள முடியாமல் இரண்டு வாரங்களில் மாடுகள் இறந்து விடுகின்றன. பால் உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தமிழகத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும், இன்று (நவ.20) சிறப்பு கிராம சபை கூட்டம் நடத்த வேண்டும். இக்கூட்டத்தில் கால்நடைத்துறையினருடன் சேர்ந்து, கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோய் குறித்தும், அதை தடுக்கும் முறை குறித்தும், கிராம மக்களுக்கு விளக்கி கூறி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும், என மாவட்ட உதவி இயக்குனர்களுக்கு (கிராம ஊராட்சி), அதன் இயக்குனர் பிரஜேந்திரா அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### உரம் பற்றாக்குறையா புகார் செய்யலாம்

தேனி : உரம் பற்றாக்குறை ஏற்பட்டாலோ, அதிக விலைக்கு விற்கப்பட்டாலோ உடனடியாக புகார் செய்யலாம், என அறிவிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை பெய்து வரும் நிலையில் முதல் போக நெல் அறுவடையும், இரண்டாம் போக நெல் நடவு பணிகளும் நடந்து வருகிறது. தவிர, மழை பெய்வதால் தோட்ட விவசாயமும், மானாவாரி விவசாயமும் அதிகம் நடந்து வருகின்றன.இந்நிலையில் உரத்தின் தேவை மிகவும் அதிகரித்துள்ளது.
எனவே உரங்கள் சப்ளை, இருப்பு, விற்பனை குறித்து கண்காணிக்க மாவட்ட விவசாய இணை இயக்குனர் அலுவலகத்தில் கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது.இக்குழுவினர் உர விற்பனை நிலவரங்களை தினமும் கண்காணித்து, அரசுக்கு அறிக் கை அனுப்பி வருகின்றனர்.

விவசாயிகளுக்கு உரங்கள் கிடைப்பதில் பிரச் னை ஏற்பட்டாலோ, தட்டுப்பாடு ஏற்பட்டாலோ, அதிக விலைக்கு விற்கப்பட்டாலோ, உடனே கண்காணிப்பு பிரிவிற்கு 94423- 33999 மற்றும் 04546- 251561 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

### தனியார் நிறுவனம் விற்ற விதையில் வீரியமில்லை மக்காசோளம் பயிரிட்ட விவசாயிகளுக்கு நஷ்டம் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கக்கோரி சப்கலெக்டரிடம் மனு

கோவில்பட்டி:கோவில்பட்டி கோட்டப்பகுதியில் தனியார் விதை நிறுவனத்தில் மக்காச்சோள விதை வாங்கி விதைத்த விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக புகார் எழுந்துள்ளது. பிரபலரக விதைப்பையை வாங்கி விதைத்தும் முளைக்காததால் நஷ்டமடைந்த விவசாயிகளுக்கு நிறுவனம் இழப்பீடு வழங்கக்கோரி சப்கலெக்டரை சந்தித்து மனுக்கொடுத்தனர்.
கோவில்பட்டி கோட்டம் விளாத்திகுளம் தாலுகாவிலுள்ள வவ்வால்தொத்தி கிராமத்தை சேர்ந்த நா.புதுப்பட்டி கிராமம் உள்ளது. இப்பகுதியில் மானாவாரி விவசாயம் மற்றும்
தோட்டப்பாசன விவ சாயம் நடந்து வருகிறது. இப்பகுதியில் உளுந்து, பாசி, கம்பு, மக்காச்சோளம், ‹ரியகாந்தி போன்றவற்றை பயிர் செய்து வருகின்றனர்.

இதனடிப்படையில் இப்பருவத்தில் சுமார் நூறு ஏக்கர் பரப்பளவில் நாகலாபுரத்திலுள்ள தனியார் விதைக்கடையில் குறிப்பிட்ட பிரபலமான மக்காச்சோள விதைகளை வாங்கி ஊன்றப்பட்டது. இவ்விதை ஊன்றிய சுமார் 6 நாட்களில் முளைத்திறன் வெளிப்பட்டிருக்க வேண்டிய நிலையில், 27 நாட்களாகியும் முளைக்கவில்லை. இதே நிறுவன விதையை புதுப்பட்டி கிராம விவசாயிகள் மட்டுமின்றி சுற்று வட்டாரத்தை சேர்ந்த வவ்வால்தொத்தி, சங்கரலிங்கபுரம், ஶ்ரீரங்கபுரம், குருவார்பட்டி, ரெட்டிபட்டி உள்ளிட்ட கிராம விவசாயிகளும் விதைத்து முளைக்கவில்லை. இதுகுறித்து விதை விற்ற கடையில் கேட்டபோது, விதை நிறுவனத்திடம் பேசி தீர்வு காண்பதாக தெரிவித்தாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் கூறுகின்றனர். ஆனால் சுமார் 45 நாட்கள் ஆகியும் விதை நிறுவனம் எந்தவித பதிலும் அளிக்காமல் இருந்த நிலையில், கடந்த 20 நாட்களுக்கு முன்னர் விதையை மாற்றிக் கொடுத்தனர். ஆனால் தற்போது மக்காச்சோள விதைப்பு பட்டம் தவறிவிட்டதால் இந்தாண்டு விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கூறுகின்றனர். ஏக்கருக்கும் சுமார் 15 ஆயிரம் வரை செலவு செய்த நிலையில் விதை நிறுவனம் இனி எதுவும் செய்ய இயலாது என்று தெரிவித்து விட்டதாக விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர். இதுகுறித்து வேளாண்மை துறை விதை உதவி இயக்குநர் நாராயணபிரசாத் உரிய உதவிகள் செய்வதாக தெரிவித்துவிட்டு தற்போது பதிலளிக்க மறுப்பதாக குற்றம் சாட்டுகின்றனர். ஆகவே போலி விதைகளை வழங்கிய குறிப்பிட்ட விதை நிறுவனத்திடமிருந்து விதை வாங்கியவர்களுக்கு ஏற்பட்ட இழப்பீட்டு தொகையை பெற்றுத்தர வேண்டுமென கோருகின்றனர். மேற்கண்ட விபரங்களை மனுவாக தயாரித்து, பாதிக்கப்பட்ட விவசாயிகள் மதிமுக விவசாய அணி மாநில துணை தலைவர் வரதராஜன் தலைமையில் கோவில்பட்டி சப்கலெக்டர் விஜயகார்த்திகேயனை சந்தித்து மனுக்கொடுத்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்தினர். இதில் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

## விவசாயிகளின் நிலம் பாதிக்காமல் புறவழிச்சாலை அமைக்க வேண்டும் சாத்தை விவசாயிகள் கோரிக்கை

சாத்தான்குளம்: சாத்தான்குளத்தில் விவசாயிகளின் நிலம் பாதிக்கபடாமல் திருச்செந்தூர் - நாகர்கோவில் புறவழிச்சாலை அமைக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருச்செந்தூர், நாகர்கோவில் செல்லும் பக்தர்களுக்காகவும், லாரி உள்ளிட்ட போக்குவரத்துக்காகவும் திருச்செந்தூர், நாகர்கோவில் செல்பவர்கள் சாத்தான்குளம் ஊருக்குள் வராமல் மகளிர் கல்லூரியிலிருந்து அமுதண்ணாகுடி, செட்டிகுளம் பிரிவு வழியாக மாற்றுப் பாதை அமைக்க ஹைவேஸ் முடிவு செய்து பணிகள் நடந்து வருகின்றன. இதில் காலி இடங்களும், நத்தம் புறம்போக்கு இடங்கள் இருந்தாலும் தற்போது விவசாயம் நடந்துவரும் இடங்களையும் அளவீடு செய்வதால் விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இது பற்றி விவசாயி ஜெகநாதன் கூறும் போது, விவசாய நிலங்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் பைபாஸ் ரோடு அமைக்க வேண்டுமென கூறினார்.

## வெள்ளை பூசணி கிலோ ரூ.2க்கு விற்பனை வரத்து அதிகரிப்பதால் விலை வீழ்ச்சி

கோபிசெட்டிபாளையம்: கோபி சுற்று வட்டாரத்தில் பூசணி சாகுபடி பரப்பளவு அதிகரித்தால், வெள்ளை பூசணி வரத்து அதிகரிப்பால், கிலோ, இரண்டு ரூபாயாக வீழ்ச்சியடைந்துள்ளது. சர்க்கரை பூசணி கிலோ, 10 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. கோபி சுற்று வட்டாரத்தில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் எல்.பி.பி., பாசன வசதி உள்ளன. கோபி, கள்ளிபட்டி, கணக்கம்பாளையம், வாணிப்புத்தூர், டி.என்.பாளையம், சத்தி, அந்தியூர், அத்தாணி, ஆப்பக்கூடல், கொளப்பலூர், திங்களூர், சிறுவலூர், பெருந்துறை உள்ளிட்ட இடங்களில், 20 முதல், 25 ஆயிரம் ஏக்கரில் வெள்ளை பூசணி, சாம்பார் பூசணி மற்றும் சேனை கிழங்கு பயிரிடப்படுகிறது.கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததால், பூசணி சாகுபடி பரப்பளவு, 5,000 ஏக்கருக்கு குறைந்துள்ளது.பூசணி மற்றும் கிழங்கு வியாபாரிகள் கூறியதாவது: கோபி சுற்று வட்டாரத்தில் மஞ்சளில் அதிகளவில் சேனை கிழங்கு ஊடுபயிராக உற்பத்தி செய்யப்படுகிறது. வெள்ளை பூசணி,

சாம்பார் பூசணி, சேனை கிழங்கு தனியாகவும் பயிரிடப்பட்டுள்ளது. சேனை கிழங்கு பயிரிட, ஒரு ஏக்கருக்கு, நான்கு டன் விதை இருந்தால் போதும். மூன்று மாதத்துக்கு பின் களை எடுத்து, இரண்டு மூட்டை பொட்டாஷ், இரண்டு மூட்டை டி.ஏ.பி., வைத்தால் நன்கு விளையும். எந்த பணியும் செய்ய தேவையில்லை. முட்டுகூலி செலவு ஏக்கருக்கு, 50 முதல், 60 ஆயிரம் ரூபாய் வரை ஆகும். ஏக்கருக்கு, 15 முதல், 20 டன் கிடைக்கும்.

பூசணிக்கு களை எடுக்கும் பணி இல்லை. ஏக்கருக்கு, 30 முதல், 50 ஆயிரம் ரூபாய் வரை செலவாகும். 15 முதல், 20 டன் கிடைக்கும்.

பூசணி அறுவடை துவங்கி உள்ளதால், பூசணி வரத்து அதிகரித்துவிட்டது. வெள்ளை பூசணி வாங்க ஆட்கள் இல்லாததால், கிலோ இரண்டு ரூபாய்க்கு விற்கப்படுகிறது. சர்க்கரை பூசணி கிலோ எட்டு ரூபாய் முதல் 10 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

சேனை கிழங்கு எட்டு மாத பயிராகும். மஞ்சளில் அதிகளவில் ஊடுபயிர் செய்யப்படுகிறது. களிமண் பகுதியில் சேனை கிழங்கு, நன்கு வளரும் தன்மை கொண்டது. சேனை கிழங்கு, பத்து மாத பயிராக இருந்தாலும், ஏழு மாதத்தில் அறுவடைக்கு தயாராகி விடும். ஒரு ஏக்கரில், 15 முதல், 20 டன் கிழங்கு உற்பத்தியாகிறது.

கோபி சுற்று வட்டாரத்தில் அறுவடை செய்யப்படும் சேனை கிழங்குகள் மற்றும் வெள்ளை பூசணி, சாம்பார் பூசணி ஆகியவை, தமிழகத்தில் தஞ்சாவூர், சென்னை, திருச்சி, கும்பகோணம் மற்றும் கேரளா, கர்நாடகா, துபாய் ஆகிய இடங்களுக்கு அதிகளவில் அனுப்பப்படுகிறது. தவிர திருப்பதி தேவஸ்தானத்துக்கு, 15 நாளுக்கு ஒரு முறை மொத்தமாக அனுப்பப்படுகிறது, என்றார்.

## கோமாரி நோயால் ஆவின் பால் கொள்முதல் சரிவு :இழப்பை ஈடு செய்த மருத்துவ அதிகாரிகள்

ஈரோடு: கோமாரி நோய் தாக்குதலால், ஆவின் நிறுவனத்துக்கு பால் வரத்து கடந்த வாரம் குறைந்தது.

ஈரோடு மாவட்டத்தில் கோமாரி நோய் தாக்குதல் பரவலாக உள்ளது. இதனால், 50க்கும் மேற்பட்ட மாடுகள் பலியாயின. கால்நடை துறையினர் பாதிக்கப்பட்ட பகுதிகளில், தடுப்பூசிகள் போட்டு, நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். கோமாரி நோய் தாக்குதல், பிற மாநிலங்களில் இருந்து விற்பனைக்காக மாட்டு சந்தைக்கு வரும் மாடுகளால், பரவுவதால், வெளிமாநில மாடுகள், மாடுகளை ஏற்றி வரும் லாரிகளுக்கும், மாட்டு சந்தைக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கோமாரி நோய் பாதிப்பால், ஈரோடு மாவட்டத்தில் பால் உற்பத்தி பெரும் அளவில் பாதிக்கப்பட்டது. ஆவின் நிறுவனம் சார்பில், கிராமப்பகுதிகளில்

அமைக்கப்பட்டுள்ள, கூட்டுறவு சங்கம் மூலம், 37 ஆயிரம் உறுப்பினர்கள் பால் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து ஆவின் நிறுவனம், மாவட்ட அளவில் தினமும், 2.40 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்கிறது. இதில், ஒரு லட்சம் லிட்டர் சென்னைக்கும், மீதம் உள்ள பால், வெண்ணெய், நெய், பால்கோவா போன்ற பிற பால் உற்பத்தி பொருள்கள் தயாரிப்புக்கும், உள்ளூர் பால் தேவைக்கும் வழங்கப்படுகிறது. கோமாரி தாக்குதலால், பால் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கால்நடைகள் பாதிப்புக்கு ஆளாகியது. இந்நோய் தாக்குதல் அதிகமுள்ள, இரண்டு கிராமப்பகுதிகளில் (இரண்டு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம்) ஆவின் நிறுவனத்துக்கு, சில ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் குறைய துவங்கியது. இதையடுத்து மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்து, ஆவின் நிறுவனத்தில் உள்ள மருத்துவர்கள், பால் உற்பத்தியாளர்களிடம் உள்ள கால்நடைகளுக்கு, சிகிச்சை அளித்தனர்.

இதன் மூலம், பால் உற்பத்தி குறைந்த நிலை மாறி தற்போது, மீண்டும் பழைய நிலைக்கு திரும்புகிறது.

இதுகுறித்து ஈரோடு கலெக்டர் சண்முகம் கூறியதாவது:

ஈரோடு மாவட்டத்தில் கோமாரி நோய் தாக்குதலால், ஆவின் நிறுவனம் மூலம் பால் கொள்முதல் சிறிய அளவு பாதிப்பு ஏற்பட்டது. போர்கால நடவடிக்கையில் இந்த பாதிப்பு சரி செய்யப்பட்டு, மீண்டும் பால் உற்பத்தி வழக்கம் போல் உள்ளது.

இதனால், ஆவின் நிறுவனத்தின் பால் கொள்முதலில் பாதிப்பு இல்லை, என்றார். ஆவின் நிறுவன அலுவலர்கள் கூறியதாவது:

ஈரோடு மாவட்டத்தில் ஆவின் நிறுவனத்தில், 37 ஆயிரம் பால் உற்பத்தியாளர்கள் உள்ளனர். இவர்கள் கால்நடைகள் பாதிக்காத வகையில், கால்நடை மருத்துவத்துறையுடன் இணைந்து, ஆவின் நிறுவன மருத்துவர்களும் கால்நடைகளுக்கு தீவிர சிகிச்சை மற்றும் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், பாதிப்பு இல்லாமல் ஆவின் நிறுவனத்துக்கு பால் கொள்முதல் செய்ய முடிகிறது, என்றனர்.

## கோமாரி நோய் பரவாமல் தடுக்கும் பணிகள் தீவிரம்

பந்தலூர் :கோமாரி நோய் தாக்கத்தை கட்டுப்படுத்த மாநில எல்லைப்பகுதியில் தடுப்பு மருந்துகள் தெளிக்கப்பட்டது.

சேரம்பாடி வனத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை சார்பில், கேரளா, கர்நாடக மாநிலங்களிலிருந்து கோமாரி நோய் பரவுதலை தடுக்கும் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, வருகின்றன. இதன் ஒரு கட்டமாக, சேரம்பாடி வனச்சரகர் கிருஷ்ணசாமி, கால்நடை டாக்டர் பிரபு தலைமையில் மாநில எல்லைப்பகுதிகளான தாளூர், சேரம்பாடி சோலாடி, நம்பியார்க்குன்னு பகுதியில், சாலையின் குறுக்காக "சோடியம் கார்பனேட்' தூளை தூவும் பணிகள் நடந்தன. "இதன் மூலம் வெளிமாநிலங்களிலிருந்து வரும் வாகனங்களின் டயர் பகுதியில் கார்பனேட் துகள்கள் ஒட்டிக்கொள்வதுடன், நோய் பரப்பும் கிருமிகளை அழிக்கும்' என, வனத்துறையினர் தெரிவித்தனர்.

* முதுமலை புலிகள் காப்பகத்தை ஒட்டிய கக்கனல்லா மற்றும் பாட்டவயல் சோதனை சாவடி, தெப்பக்காடு, மசினகுடி பகுதிகளில் சாலையின் நடுவில் காஸ்டிக்சோடா, சுண்ணாம்பு கலவை தூவப்பட்டது. "கால்நடைகளை வனப்பகுதிக்குள் மேய்ச்சலுக்கு விட வேண்டாம்' என, வனத்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

### கொள்முதல் துவக்கம்

மஞ்சூர் : மஞ்சூர் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில், பசுந்தேயிலை வரத்து அதிகரித்த காரணத்தால், கடந்த ஒன்றரை மாதமாக "கோட்டா' முறை அமுல்படுத்தப்பட்டது. அதே சமயத்தில் அளவுக்கு அதிகமான பசுந்தேயிலை அரைக்கப்பட் டதால் இயந்திரங்களை பராமரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால், கடந்த ஒரு வாரமாக அங்கத்தினர்களிடமிருந்து பசுந்தேயிலை கொள்முதல் செய்வதை தொழிற்சாலை நிர்வாகம் நிறுத்தியது.இந்நிலையில், பராமரிப்பு பணிகள் முழுமையாக முடிந்ததை அடுத்து, நேற்று முதல் அங்கத்தினர்களிடமிருந்து பசுந்தேயிலை கொள்முதல் செய்யப்பட்டது.

### கோமாரியால் இறப்பு அதிகரிப்பு? வாய்க்காலில் வீசப்படும் கால்நடை

திருச்சி: தமிழகம் முழுவதும் கோமாரி நோய் தாக்கி ஏராளமான ஆடு, மாடு உள்ளிட்ட கால்நடைகள் இறந்து வருகின்றன. திருச்சியில் இதுவரை மூன்று மாடுகள் இறந்துள்ளதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், உண்மை நிலவரம் இந்த எண்ணிக்கையை காட்டிலும் அதிகம் என்கின்றனர் விவசாயிகள்.

கோமாரி நோய் தாக்கி இறந்த கால்நடைகளை விவசாயிகள் ஆறுகளில் வீசுவதால், நோய் தொற்று வேகமாக பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. திருச்சி உய்யக்கொண்டான் வாய்க்காலில் நேற்று காலை, 4 மாடுகள் இறந்த நிலையில் மிதந்தபடி வந்தது.

கால்நடைகள் ஊறிக்காணப்படுவதை பார்த்தால் அவை வாய்க்காலில் வீசி சில நாட்களுக்கு முன் அவை வீசப்பட்டிருக்க வேண்டும். அவற்றின் வாய், கால் பகுதிகள் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டு இறந்ததை உறுதி செய்தன.

செத்து மிதந்த மீன்கள்: மாடுகளின் உடல்கள் மிதந்து வந்த பகுதிகள், ஆழ்வார்தோப்பு பகுதிகளில் ஏராளமான மீன்கள் செத்து மிதந்தன. இதனால், அப்பகுதி மக்கள் அதிர்ச்சியடைந்தனர். கோமாரி நோய் தாக்கப்பட்ட மாடுகள் வீசப்பட்டதால் அந்த மீன்கள் இறந்திருக்கலாம் என சந்தேகித்தனர். ஆனால், அப்பகுதியில் சில தனியார் மருத்துவனைகள், மருத்துவக்கழிவுகளை

கொட்டுவதால், இதுபோல அடிக்கடி மீன்கள் செத்து மிதப்பதாக சிலர் தெரிவிக்கின்றனர்.

குழந்தைக்கு கோமாரி நோய் பாதிப்பு?: திருச்சி அண்ணாமலை நகர் பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில், ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தை ஒன்று சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது. அந்த குழந்தையின், கை, வாய் பகுதியில் மாடுகளுக்கு ஏற்படுவதுபோல கோமாரி நோய் போன்ற புண்கள் ஏற்பட்டுள்ளது. எனவே, குழந்தையை கோமாரி நோய் தாக்கியிருக்கலாம் என சந்தேகித்த டாக்டர்கள், கால்நடை டாக்டர்களிடம் ஆலோசனை நடத்தினர். மனிதர்களுக்கு கோமாரி நோய் தாக்காது என அவர்கள் திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர். ஆயினும், பெரியவர்களுக்குத்தான் இந்த நோய் தாக்காது. நோய் எதிர்ப்பு சக்தி குறைவானவர்களுக்கு, குழந்தைகளுக்கு இந்த நோய் தாக்கும் வாய்ப்பு உள்ளதாக டாக்டர்கள் தெரிவிக்கின்றனர்.

## பெரம்பலூர் மாவட்டத்தில் பரவலாக மழை

பெரம்பலூர்: பெரம்பலூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை ஏற்கனவே தவறிவிட்ட நிலையில் வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக பெரம்பலூர் கடந்த 16ம் தேதி அதிகாலை முதல் இரவு வரை பரவலான மழை பெய்தது. கார்த்திகை தீபத்தன்று வெயிலுடன் தட்பவெப்பநிலை இதமாக இருந்தது. பெரம்பலூரில் நேற்று காலை முதல் மாலை வரை பரவலாக லேசாக விட்டு விட்டு மழை பெய்தது. நேற்று முன்தினம் காலை பதிவான மழை அளவு விபரம்:

பெரம்பலூர்- 71.5 மில்லி மீட்டர், வெண்பாவூர்- 80 மில்லி மீட்டர், தழுதாழை-70 மில்லி மீட்டர், பாடாலூர், -9 மில்லி மீட்டர், செட்டிக்குளம்- 84 மில்லி மீட்டர் என மொத்தம்- 377.50 மில்லி மீட்டர் சராசரி மழை அளவு-75.5 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

## அரசு தோட்டக்கலை பண்ணைக்கு...ரூ.1.34 கோடி! காய்கறி உற்பத்தி துவங்க திட்டம்

காஞ்சிபுரம்:விச்சந்தாங்கல் அரசு தோட்டக்கலை பண்ணையை மேம்படுத்த, 1.34 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு உள்ளது. இதை பயன்படுத்தி, பண்ணையை காய்கறி உற்பத்தி மையமாக மாற்ற, அதிகாரிகள் திட்டமிட்டு உள்ளனர். காஞ்சிபுரம் மாவட்டத்தில், மேல்கதிர்பூர், மேல் ஒட்டிவாக்கம், விச்சந்தாங்கல், பிச்சிவாக்கம், ஆத்துார் ஆகிய இடங்களில், அரசு தோட்டக்கலை பண்ணைகள் உள்ளன. இவற்றில், பல்வேறு வகையான மரக்கன்றுகள் மற்றும் அலங்கார செடிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

57 ஏக்கரில்காஞ்சிபுரம் உத்திரமேரூர் சாலையில் உள்ள, விச்சந்தாங்கல் அரசு தோட்டக்கலை பண்ணை, 57 ஏக்கர் பரப்பளவு கொண்டது.

இங்கு, 10 ஏக்கர் பரப்பளவில் அலங்கார செடி நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த பண்ணை காஞ்சிபுரம் நகரின் அருகே உள்ளதால், உற்பத்தியாகும் செடிகள், உடனுக்குடன் விற்பனையாகின்றன.

இந்த பண்ணையில் உற்பத்தி பரப்பளவை அதிகரிக்கவும், பண்ணை பயன்பாட்டை மேம்படுத்தவும், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில், 1.34 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு உள்ளது.

பழங்களும் உண்டுதற்போது, மேம்பாட்டு பணிகள் துவங்கும் நிலையில் உள்ளன. இது குறித்து, காஞ்சிபுரம் தோட்டக்கலை துறை துணை இயக்குனர் கோமதி கூறுகையில், "இந்த நிதியைக் கொண்டு, பண்ணையின் வருமானத்தை பெருக்கும் வகையில், காய்கறி செடிகள் பயிரிட உள்ளோம். இது தவிர, பூ, பழம் மற்றும் மரக்கன்றுகளை உற்பத்தி செய்யவும் திட்டமிட்டு உள்ளோம்," என்றார்.

மேலும், பணிகள் தொடர்பாக, "வேளாண்மை துறை, பொறியியல் துறைகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறோம். அடுத்த மாதம் பணி துவங்கப்படும்," என்றார்.

## நெல் அறுவடை நேரத்தில் மழை காத்திருந்த விவசாயிகள் கவலை

காஞ்சிபுரம்:அறுவடைக்கு தயாராக உள்ள நெற்கதிர்கள் மழையால், சாய்ந்து தண்ணீரில் மூழ்கியுள்ளதால், விவசாயிகள் கவலையடைந்து உள்ளனர்.

காஞ்சிபுரம் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில், பரவலாக மழை பெய்து வருகிறது. இந்த மழையால், விஷார், முசரவாக்கம், மேட்டுப்பாளையம் போன்ற கிராம பகுதியில் அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மழையால், நெற்கதிர்கள் சாய்ந்து, தண்ணீரில் மூழ்கியுள்ளன. இதனால், விவசாயிகள் கவலையடைந்து உள்ளனர்.

இதுகுறித்து, விஷார் கிராம விவசாயி ஆண்டவன் கூறுகையில், "மூன்று ஏக்கரில் சூப்பர் பொன்னி பயிர் செய்திருந்தேன். நெற்பயிர் நன்றாக விளைந்து, அடுத்த வாரம் அறுவடைக்கு தயாராக இருந்தது. அறுவடையை சிறப்பாக செய்யலாம் என, நினைத்திருந்தோம். அதற்குள் மழை பெய்ததால், கதிர்கள் தண்ணீரில் மூழ்கிவிட்டன. தண்ணீர் வடிந்த பின்தான் அறுவடை செய்ய முடியும். அதற்குள் மூழ்கிய நெற்கதிர்கள் மக்கும் வாய்ப்பு ஏற்படும். இதனால், பெரும் நஷ்டத்தை சந்திக்க வேண்டியுள்ளது," என்றார்.

## கூட்டு பண்ணை விவசாயத்தில்...ஆர்வமில்லை! செயல்படுத்த அதிகாரிகள் திணறல்

ஸ்ரீபெரும்புதுார்:விவசாயிகள் ஆர்வம் காட்டாததால், ஒருங்கிணைந்த கூட்டு பண்ணை திட்டம், தோல்வியடையும் நிலையில் உள்ளது. திட்டத்தில் உள்ள குறைபாடு களை களையவோ, திட்டத்தை ரத்து செய்யவோ அரசு பரிசீலிக்காவிட்டால், வரிப்பணம் வீணடிக்கப்படும் அபாயம் ஏற்பட்டு உள்ளது.

சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கான கூட்டு பண்ணை திட்டம், கடந்த ஏப்ரல் மாதம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி, விவசாய நிலத்தில் குட்டை அமைத்து மீன்கள் வளர்க்கவும், கோழிப்பண்ணை நிறுவவும் மானியம் வழங்கப்படுகிறது. இதன் மூலம், விவசாயிகளின் வருவாய் பெருகும் என, எதிர்பார்க்கப்பட்டது. இந்த திட்டத்திற்காக, காஞ்சிபுரம் மாவட்டத்தில், 400 விவசாயிகள் தேர்வு

செய்யப்பட்டனர்.ஆனால், பல்வேறு காரணங்களால், இவர்களில் பலர் பின்வாங்கினர். இறுதியில், 180 பேர் மட்டுமே திட்டத்தை செயல்படுத்த முன்வந்தனர். திட்டத்தை செயல்படுத்துவதில் உள்ள குறைபாடுகளால், முன்வந்தவர்களும், தற்போது, வருத்தப்படுகின்றனர்.'சிக்கிக் கொண்டேன்'இதுகுறித்து, ஸ்ரீபெரும்புதுார் ஒன்றியத்தை சேர்ந்த விவசாயி ஒருவர் கூறியதாவது:பண்ணை குட்டை அமைக்க, 1.5 லட்சம் ரூபாய் மானியம் வழங்குவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதனால், திட்டத்தை செயல்படுத்த ப்புக்கொண்டேன். தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் பணியாற்றுவோரைக் கொண்டு இந்த பணியை செய்வதால், மானிய தொகையை, அவர்களுக்கு சம்பளமாக கொடுத்து விடுகின்றனர். இந்த பணியாளர்கள், ஒரே குட்டையை ஆறு மாதங்களாக அமைத்து வருகின்றனர். இதுவரை, 50 சதவீத அளவில் தான் பணி முடிந்துள்ளது. குட்டை அமைக்க தோண்டிய, மண்ணை, நிலத்தில் சமமாக பரப்பாமல், விருப்பம் போல் கொட்டுவதால், விவசாயப் பணிகள் பாதிக்கப்படுகின்றன.பயிர் வைக்க முடியவில்லைஏதோ என்னால் முடிந்த அளவில் பயிரிட்டு, குடும்பத்தை காப்பாற்றி வந்தேன். இந்த திட்டத்தை தலையில் கட்டியதன் மூலம் அதையும் தடுத்துவிட்டனர். மன உளைச்சலால் அவதிப்படுகிறேன்.இந்த திட்டத்தை அமல்படுத்த ஒப்புக்கொண்டதால், அன்றாடம் குடும்பம் நடத்துவதற்கே சிரமமாக உள்ளது.இவ்வாறு, அவர் கூறினார். திட்ட பணிகளை மேற்கொள்ளும் தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்ட பணியாளர்கள், குட்டை வெட்டும் பணியை மெத்தனமாக செய்து வருவதால், அதிகாரிகளின் கணக்குப்படி, தற்போது, 50 சதவீத பணிகள் தான் முடிந்து உள்ளன.ஒவ்வொரு ஒன்றியத்திலும், ஏறத்தாழ 15 பயனாளிகள் தான் உள்ளனர். திட்டம் துவங்கி, ஆறு மாதங்களுக்கு மேலாகியும் பணிகள் முடியவில்லை என்பதற்கு, திட்டம் செயல்படுத்தப்படும் முறையில் உள்ள குறைபாடுகளே காரணம்.பெரும் சிக்கல்அதிகாரிகள் தரப்பில், விவசாயிகளின் ஆர்வமின்மை காரணமாக கூறப்படுகிறது. ஸ்ரீபெரும்புதுார் வட்டார வளர்ச்சி அலுவலர்

சிங்காரவேலன் கூறியதாவது:

ஒன்றியத்தில் பெரும்பாலான கிராமங்களில், விவசாயம் நடக்கவில்லை. தொழிற்பேட்டை வளாகங்களாக மாறிவிட்டன. விவசாயிகள் பண்ணை குட்டையில் மீன் வளர்ப்பது, கோழிப்பண்ணை அமைத்து விவசாயம் செய்வது போன்றவற்றில் ஆர்வம் காட்டவில்லை. இதனால், பண்ணை குட்டை திட்டத்தை செயல்படுத்துவது பெரும் சிக்கலாக உள்ளது.இவ்வாறு, அவர் கூறினார்.

நிலை இப்படி இருக்க திட்டத்தை ரத்து செய்து, வரிப்பணத்தை மிச்சப்படுத்துவது குறித்து, அரசு பரிசீலிக்க வேண்டும்.

## நவரை பருவ பாசனத்துக்கு தென்னேரியில் தண்ணீர் திறப்பு

காஞ்சிபுரம்:தென்னேரி ஏரியில் இருந்து, நவரைப் பருவ பாசனத்திற்காக, தண்ணீர் திறந்து விடப்பட்டது.காஞ்சிபுரம் மாவட்டத்தில், பெரிய ஏரிகளில் ஒன்று தென்னேரி. 5,868 ஏக்கர் பரப்பளவு உள்ளது.தென்னேரி, அகரம், கோவல வேடு, திருவங் கரணை, வாரணவாசி உள்ளிட்ட, 15 கிராமங்களில் 5,000 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதியை அளிக்கிறது.

கடந்த இரண்டு மாதங்களில் அவ்வப்போது பெய்த மழையால், ஏரியில், 11 அடி அளவு தண்ணீர் சேகரமாகி உள்ளது. இந்த தண்ணீரை நவரைப் பருவ பாசனத்திற்கு, அதிகாரிகள் திறந்துவிட்டனர்.

காஞ்சிபுரம் பொதுப்பணித் துறை நீர்வள நிலவள இளநிலை பொறியாளர் தியாகராஜன் தலைமையில், மதகில் இருந்து தண்ணீர் திறக்கும் நிகழ்ச்சி நடந்தது. உத்திரமேரூர் எம்.எல்.ஏ., கணேசன், வாலாஜாபாத் ஒன்றிய குழுத் தலைவர் வரதராஜலு ஆகியோர் மலர் தூவி, பாசனத்திற்கு தண்ணீரை திறந்து விட்டனர். விழாவில், தென்னேரி ஊராட்சி தலைவர் வினோ பாஜி, நீர்பாசனத் தலைவர் பாபு மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## விவசாயிகள் குறை தீர்வு கூட்டம்

காஞ்சிபுரம்:ஊராட்சி முகமை அலுவலகத்தில், விவசாயிகள் குறை தீர்வு கூட்டம் நடைபெற உள்ளது.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில், வரும் 22ம் தேதி வெள்ளி கிழமை அன்று காலை 10:00 மணிக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையில், விவசாயிகள் குறை தீர்வு கூட்டம் நடைபெற உள்ளது.

இதில், மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் கலந்துகொண்டு, வேளாண்துறை மற்றும் அதன் சார்பு துறைகள் தொடர்பான குறைகள் தெரிவிக்கலாம். விவசாயிகள் கோரிக்கை மனுக்களை அளிக்கலாம்.

## நோய்வாய்ப்பட்ட கால்நடைகளை கொண்டு வர...தடை! கோமாரி பாதிப்பால் எல்லையில் கண்காணிப்பு

ஆந்திர மாநிலத்தில் இருந்து, கோமாரி நோய் பாதிப்பு இருக்கும் மாடுகளை, திருவள்ளூர் மாவட்டத்திற்குள் கொண்டு வர, ஆட்சியர் தடை விதித்துள்ளதை அடுத்து, மாநில எல்லையில் உள்ள சோதனை சாவடியில் கால்நடை மருத்துவ குழுவினர் கண்காணித்து வருகின்றனர்.

திருவள்ளூர் மாவட்ட ஒன்றியங்களில், திருத்தணியில் - 45, ஆர்.கே.பேட்டையில் - 27, திருவாலங்காட்டில் - 20, பள்ளிப்பட்டில் - எட்டு என, மொத்தம் 100 மாடுகள், கடந்த சில வாரங்களில், கோமாரி நோய் பாதிப்பால் பலியாகி உள்ளன. மேலும், 1000 மாடுகளுக்கு, நோய் பாதிப்பு உள்ளதாக தெரிகிறது.

எப்படி பரவியது?

கோமாரி நோயில் இருந்து, மாடுகளை பாதுகாக்க, கடந்த மாதம் வரை, 84 ஆயிரம் தடுப்பூசிகள் போடப்பட்டு உள்ளன. இருந்தும், நோய் பாதிப்பு முழுமையாக தடுக்கப்படவில்லை.

ஆந்திர மாநிலத்தில் இருந்து கொண்டு வரப்படும் கால்நடைகளில் இருந்துதான், கோமாரி நோய் பரவி வருவதாக கால்டை மருத்துவர்கள் கருதுகின்றனர். விவசாயிகளுக்கு வழங்கப்படும் கால்நடைகள், ஆந்திராவில் இருந்து தான் வாங்கப்படுகின்றன.

அவற்றில் இருந்தும், கோமாரி நோய் பரவியிருக்கலாம் என, விவசாயிகள்

சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

இதையடுத்து, ஆந்திர மாநிலத்தில் இருந்து வரும் கால்நடைகளுக்கு, கோமாரி நோய் பாதிப்பு இருந்தால், மாவட்டத்திற்குள் கொண்டுவர அனுமதிக்கக் கூடாது என, கடந்த சனிக்கிழமை, மாவட்ட ஆட்சியர் வீரராகவ ராவ் உத்தரவிட்டார்.

24 மணி நேரமும்...ஆந்திராவில் இருந்து கொண்டுவரப்படும் மாடுகளை கண்காணிக்க, திருத்தணி - நகரி இடையேயான, பொன்பாடி சோதனை சாவடியில், மூன்று பேர் அடங்கிய கால்நடை மருத்துவ குழு ஆய்வுப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளது.

இதில், ஒரு மருத்துவர், ஆய்வாளர், உதவியாளர் என, 24 மணி நேரமும் பணியில் இருப்பர். சோதனை சாவடி வழியாக வரும் கால்நடைகளுக்கு, கோமாரி நோய் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டால், அவற்றை தமிழகத்திற்குள் கொண்டு வர அனுமதி மறுக்கப்படும்.

மருந்து பற்றாக்குறை அரசு கால்நடை மருந்தகங்களில், கோமாரி நோய் தடுப்பூசி மருந்து இருப்பு இல்லை. இந்நிலையில், கோமாரி பாதித்த கால்நடைகளுக்கு, தனியார் மருந்து கடைகளில், தடுப்பூசி வாங்க, மருத்துவர்கள், பரிந்துரை செய்து வருகின்றனர்.

இதுகுறித்து, அரசு கால்நடை மருத்துவர் ஒருவர் கூறுகையில், "கடந்த ஆண்டு, அனுப்பிய அளவிலான மருந்துகளே, இந்த ஆண்டும், கால்நடை மருத்துவ துறையினர், அனுப்பி உள்ளனர். கடந்த ஆண்டு நோய் பாதிப்பு இல்லை. ஆனால், இந்த ஆண்டு கோமாரி நோய் தாக்கம் அதிகமாக உள்ளதால், மருந்துகளின் எண்ணிக்கையில், பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளது," என்றார்.

- நமது நிருபர் குழு –

## கோமாரி நோய் தாக்குதல் கிராம சபை கூட்டம்

கடம்பத்துார்:கடம்பத்துார் ஒன்றியத்தில், இன்று, சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற உள்ளது.

கோமாரி நோய் தாக்கி, கால்நடைகள் இறந்து வருகின்றன.

இதுகுறித்து, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், கடம்பத்துார் ஒன்றியத்துக்கு உட்பட்ட, 43 ஊராட்சியிலும், மாவட்ட ஆட்சியரின் உத்தரவின்பேரில், சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற உள்ளது.கிராம சபை கூட்டம், காலை, 10:00 மணிக்கு, நடைபெறும். இதில், கிராம மக்கள் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என, கடம்பத்துார் வட்டார வளர்ச்சி அலுவலர் கேட்டுக் கொண்டுள்ளார்.

### செம்பரம்பாக்கத்தில் 51 மி.மீ., மழை

திருவள்ளூர்:திருவள்ளூர் மாவட்டத்தில், அதிகபட்சமாக 51 மி.மீ., மழை பதிவாகி உள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில், கடந்த, இரண்டு நாட்களாக, பலத்த மழை பெய்து வருகிறது. தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கி உள்ளது. திருவள்ளூர் நகராட்சிக்கு உட்பட்ட, சாலைகளில் தேங்கிய மழை நீரை அகற்றும் பணியில், நகராட்சி ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். மாவட்டத்தில், செம்பரம்பாக்கத்தில், அதிகபட்சமாக, 51 மி.மீட்டரும், ஆர்.கே.பேட்டையில், குறைந்தபட்சமாக, மூன்று மி.மீட்டரும் மழை பதிவாகியுள்ளது.

### கால்நடை மருத்துவ முகாம்

சின்னசேலம்: விழுப்புரம், கடலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் சார்பில் அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவினையொட்டி கால்நடை மருத் துவ முகாம் நடந்தது.

சின்னசேலம் அடுத்த தோட்டபாடியில் நடந்த முகாமிற்கு விழுப்புரம் ஆவின் சேர்மன் விஜயகுமார் தலைமை தாங்கினார். உதவி பொதுமேலாளர் சுந்தரேசன், இணைப்பதிவாளர் ராஜா, உதவி பொது மேலாளர் மாணிக்கம் முன்னிலை வகித்தனர். டாக்டர் விருட் சப்பதாஸ் வரவேற்றார்.

டாக்டர்கள் வெங்கடேசன், பாலசுப்ரமணியன், முருகேசன், சண்முகம் ஆகியோர் 200 கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி, 100 கால்நடைகளுக்கு குடல் புழு நீக்கத்திற்கு பூச்சு மருந்து வழங்கப்பட்டது. உதவியாளர் கணபதி நன்றி கூறினார்.

### தொடர் மழையால் சாய்ந்த கரும்பு பயிர்கள்

சங்கராபுரம்:சங்கராபுரம் பகுதியில் பெய்த கன மழையால் கரும்பு பயிர்கள் சாய்ந்தது.

சங்கராபுரம் பகுதியில் நேற்று முன் தினம் சூறாவளி காற்றுடன் மழை பெய்தது. இந்த மழையால் சங்கராபுரம் அடுத்துள்ள தியாகராஜபுரத்தில் சாகுபடி செய்யப்பட்டிருந்த கரும்பு பயிர்கள் காற்றில் சாய்ந்தது.

### விதை பண்ணை உளுந்து பயிரை வேளாண் உதவி இயக்குனர் ஆய்வு

உளுந்தூர்பேட்டை:உளுந்தூர்பேட்டையில் விதை பண்ணை உளுந்து பயிரினை வேளாண் உதவி இயக்குனர் பார்வை யிட்டு ஆலோசனை வழங்கினார்.

உளுந்தூர்பேட்டை ஒன்றியத்தில் 10 ஆயிரம் ஏக்கர் உளுந்து பயிரிடப்பட்டுள்ளது. அவற்றில் வேளாண் துறை சார்பில் 60 ஏக்கர் சான்று விதை பண்ணை உளுந்து பயிரிடப்பட்டுள்ளது. இந்த விதை பண்ணை வைக்கும் விவசாயிகளுக்கு வேளாண் துறை சார்பில் விதைகள், இடுபொருட்கள், உரங்கள் வழங்குவதோடு வேளாண் துறையே கொள்முதல் செய்து ஊக்க தொகையும், ஒரு கிலோ உளுந்துக்கு ரூ. 25 மான்யம் மற்றும் சந்தை மதிப்பீட்டு தொகை யும் வழங்கப்படுகிறது.

அந்த வகையில் பயிரிடப்பட்டுள்ள உளுந்து பயிரினை வேளாண் உதவி இயக்குனர் கருணாநிதி நேரில் பார்வையிட்டார். உளுந்து பயிரிட்ட 30 நாளில் களையெடுக்க வேண்டும். பூக்கள் வைக் கும் நேரத்தில் ஒரு ஏக்கருக்கு 2 கிலோ டி.ஏ.பி., போடுவதன் மூலம் அதிக மகசூல் கிடைக்கும் என விவசாயி இளங்கோவனுக்கு அறிவுறுத்தினார். வேளாண் விரிவாக்க அலுவலர் பொன்காமராஜ், விதை சான்று உதவி அலுவலர் மணி, விவசாயிகள் உடனிருந்தனர்.விதை பண்ணைகளில் வேளாண் அதிகாரிகள் கண்காணித்து ஆலோசனை வழங்கி வருகின்றனர்.

### மழையை கொடுக்காமல் ஏமாற்றிய புயல் சின்னம்

தியாகதுருகம்:வங்க கடலில் உருவான இரண்டாவது புயலும் மழையை கொடுக்காமல் ஏமாற்றியதால் கள்ளக்குறிச்சி பகுதி விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர்.வடகிழக்கு பருவமழை விழுப்புரம் மாவட்டத்தில் எதிர்பார்த்த அளவு பெய்யவில்லை. கடந்த ஆண்டு மழை பற்றாக்குறையால்

ஏற்பட்ட பாதிப்பில் இருந்து மீளமுடியாத நிலையில், தொடர்ந்து மழை பொய்த்ததால் கள்ளக்குறிச்சி பகுதியில் விவசாயம் கடுமையாக பாதித்துள்ளனர். முக்கிய நீர் ஆதாரமாக விளங்கும் கோமுகி, மணிமுக்தா அணைகளுக்கு தண்ணீர் வரத்தின்றி வெட்ட வெளி மைதானம் போல் பரிதாபமாக காட்சியளிக்கிறது. அனைத்து கிராமங்களிலும் உள்ள ஏரிகளில் நீரின்றி வறண்டு கிடக்கிறது. கடந்த மாதம் 22ம் தேதி வடகிழக்கு பருவமழை துவங்கியது. வங்க கடலில் உருவான "பைலின்' புயல் மழையை கொடுக்காமல் கேரளா நோக்கி நகர்ந்து ஏமாற்றியது. கடந்த வாரம் இலங்கை அருகே உருவான புயல் சின்னம் நாகப் பட்டினம் அருகே கரையை கடந்த போதிலும் லேசான மழையுடன் முடிவுக்கு வந்தது. இது நீர்நிலைகளுக்கு போதிய தண்ணீர் கிடைக்கும் அளவுக்கு பெய்யாததால் விவசாயிகள் ஏமாற்ற மடைந்தனர். நீர்மட்டம் எதிர்பார்த்த அளவுக்கு இன்னும் உயரவில்லை. மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் சம்பா நெல் சாகுபடியை துவங்கி விவசாயிகள் கலக்கத்தில் உள்ளனர். புதிதாக புயல் உருவாகி கன மழையை கொடுக்க வேண்டும்.

### கோமாரி நோய் தடுக்க சிறப்பு கிராம சபா

தர்மபுரி: தர்மபுரியில் கால் மற்றும் வாய் கோமாரி நோய் தடுப்பு சிறப்பு கிராம சபா கூட்டம் இன்று(நவ., 19) நடக்கிறது.இதுகுறித்து கலெக்டர் விவேகானந்தன் வெளியிட்டுள்ள அறிக்கை:தர்மபுரி மாவட்டத்தில், 251 கிராம பஞ்சாயத்துகளிலும் இன்று(நவ., 19) செவ்வாய்கிழமை காலை, 11 மணிக்கு, கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய் கோமாரி தடுப்பு குறித்தும், கோமாரி நோய் பாதிப்பின் போது கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் குறித்த சிறப்பு கிராம சபை கூட்டம், அந்தந்த பஞ்சாயத்துகளில் உள்ள பொதுவான இடத்தில் நடக்கிறது. அனைத்து பஞ்சாயத்து தலைவர்கள் இன்று நடத்தப்படும் சிறப்பு சபையில் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வருகின்றனர். இதில் ஒவ்வொரு யூனியனுக்கும், உதவி இயக்குனர்கள் நிலையிலான தொகுதி அலுவலர்கள் பார்வையார்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.தேர்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அனைத்து பஞ்சாயத்து நிர்வாகிகள், தலைவர்கள், வாக்காளர், பொதுமக்கள், மகளிர் சுய உதவிக்குழுக்கள் மற்றம் மாற்றுத்திறானிகள் விவசாயிகள் கால்நடை வளர்ப்போர் உள்பட அனைவரும் கலந்து கொள்ளலாம்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**19.11.2013**

## விவசாயிகளுக்கு பென்ஷன் வழங்க கோரி கஞ்சி காய்ச்சும் போராட்டம்

காஞ்சிபுரம், : தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில், பென்ஷன் வழங்க கோரி கஞ்சி காய்ச்சும் போராட்டம் காஞ்சிபுரம் புத்தேரி கிராமத்தில் நேற்று நடந்தது. ஒன்றிய செயலாளர் லாரன்ஸ் தலைமை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தின்போது, உழவர் பாதுகாப்பு திட்டத்தில் பென்ஷன் கிடைக்காதவர்களுக்கு உடனே வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும், தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் முறையாக கூலி வழங்கவேண்டும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும், அம்மா திட்டம் என்ற பெயரில் பென்ஷன் உத்தரவு வழங்கிவிட்டு பலமாதமாக ஏமாற்றும் போக்கை கைவிடவேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தினர். இதில், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் நேரு, சிஐடியு மாவட்ட செயலாளர் முத்துகுமார், நிர்வாகிகள் பாஸ்கர், ஆறுமுகம், சாந்திபூஷன், வசந்தா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தகவல் அறிந்து வந்த காஞ்சிபுரம் தாசில்தார் தங்கவேலு, சிறப்பு தாசில்தார் ஏகாம்பரம், வட்டார வளர்ச்சி அலுவலர் அம்பிகாபதி ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினர். பிறகு கோரிக்கைகளை பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர். இதையடுத்து அனைவரும் கலைந்து சென்றனர். இந்த சம்பத்தால் 30 நிமிடம் பரபரப்பு ஏற்பட்டது.

**கால்நடைகளுக்கு மருத்துவ உதவி பெற போன் நம்பர் அறிவிப்பு**

காஞ்சிபுரம், : காஞ்சிபுரம் கலெக்டர் பாஸ்கரன் வெளியிட்டுள்ள அறிக்கை: காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொற்றுநோயால் பாதிக்கப்படும் கால்நடை குறித்து தகவல் தெரிவிக்கலாம். கால்நடைகளுக்கு சிகிச்சை பெற கால்நடை மருத்துவமனை, மருந்தகங்களை அணுகவேண்டும். மேலும் மழை காலத்தில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்புவதை தவிர்க்கவும். மழையில் நனையாபடி கொட்டகையில் கட்டிவைக்கவேண்டும்.
அவசர மருத்துவ உதவிக்கு அணுகவேண்டிய தொலைபேசி எண்கள்: காஞ்சிபுரம் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர்-94450 01130, கால்நடை நோய் புலனாய்வு பிரிவு உதவி இயக்குனர்-94440 42787, 94457 72277, 94450 32605, மதுராந்தகம் கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர்-94450 01155, செங்கல்பட்டு கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர்-98418 76993, காஞ்சிபுரம் கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர்-98849 94294 ஆகிய செல்போனில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**அடக்கம் செய்ய பணம் இல்லாததால் கோமாரி நோய் தாக்கி இறந்த மாடுகள் வாய்க்காலில் வீச்சு**



ஈரோடு:தமிழகத்தில் பரவிவரும் கோமாரி நோய்க்கு ஆயிரக்கணக்கான கால்நடைகள் பலியாகி வருகின்றன. ஈரோடு மாவட்டத்தில் பெருந்துறை, மொடக்குறிச்சி, ஈரோடு, சென்னிமலை ஆகிய நான்கு ஒன்றியங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் கோமாரி நோயின் தாக்கம் உள்ளது. இந்த நோயால் இறந்த மாடுகளை

6 அடி ஆழம் குழி தோண்டி புதைக்க வேண்டும் என்றும், புதைக்கும்போது நோய் கிருமிகளை அழிக்கும் வகையில் 10 கிலோ சமையல் உப்பு, 10 கிலோ சுண்ணாம்பு, 5 கிலோ பிளீச்சிங் பவுடர் உள்ளிட்டவைகளை கலந்து குழிக்குள் போட வேண்டும் என்று கால்நடைத்துறையினர் தெரிவித்துள்ளனர். இதன்படி செய்ய 3 ஆயிரம் வரை செலவாவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். பணம் இல்லாததால் இரவு நேரங்களில் சில விவசாயிகள் இறந்த மாடுகளை வாய்க்காலில் வீசி விட்டு சென்று விடுகின்றனர்.

இறந்துபோன கால்நடைகளை வாய்க்காலில் வீசுவதால் அந்த தண்ணீரை குடிக்கும் மற்ற கால்நடைகளுக்கும் எளிதில் கோமாரி நோய் தாக்கும் அபாயம் உள்ளதாக கால்நடைத்துறையினர் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து கால்நடைத்துறை இணை இயக்குநர் வனங்காமுடி கூறுகையில், கோமாரி நோயினால் இறந்த கால்நடைகளை வாய்க்காலில் வீசும் விவசாயிகள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க கலெக்டர் உத்தரவிட்டுள்ளார்.கால்நடைத்துறை, உள்ளாட்சி நிர்வாகம், வருவாய்துறை இணைந்து வாய்க்கால் பகுதியில் கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றோம். இறந்து போன கால்நடைகளை தண்ணீரில் வீசும் போது அந்த மாட்டில் உள்ள வைரஸ் கிருமிகள் தண்ணீர் மூலம் பரவி அந்த தண்ணீரை குடிக்கும் மற்ற கால்நடைகளுக்கும் எளிதில் பரவும் நிலை உள்ளது. குறிப்பாக கன்றுக்குட்டிகளை எளிதில் தாக்கிவிடும்'' என்று தெரிவித்தார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

19.11.2013

**குன்னூர் ஏல மையத்தில் 92 சதவீத தேயிலை தூள் விற்பனை**

குன்னூர்,

குன்னூர் ஏல மையத்தில் 92 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.

தேயிலை ஏலம்

குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பின் சார்பில் வாரந் தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்கள் தேயிலை ஏலம் நடத்தப்படுகிறது. இந்த ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டு தேயிலை தூளை ஏலம் எடுக்கிறார்கள்.

விற்பனை எண் 46-க்கான ஏலம் கடந்த 14, 15-ந் தேதி நடைபெற்றது. ஏலத்திற்கு மொத்தம் 16 லட்சத்து 86 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில், 10 லட்சத்து 80 ஆயிரம் கிலோ இலை ரக மாகவும், 6 லட்சத்து 6 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.

92 சதவீத தேயிலை விற்பனை

இந்த ஏலத்தில் 92 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது. விற்பனையான தேயிலை தூளுக்கு ரூ.2 விலை ஏற்றம் கண்டது. சி.டி.சி. தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலையாக 183 ரூபாயாக இருந்தது. ஆர்தோடக்ஸ் தேயிலை தூள் 221 ரூபாய் என்று உயர்ந்த பட்ச விலை யாக ஏலம் சென்றது.

சராசரி விலையாக இலை ரக தேயிலை தூளின் சாதா ரண வகை 57 ரூபாயில் இருந்து 60 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 100 ரூபாயில் இருந்து 190 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.

டஸ்ட் ரக தேயிலை தூளின் சாதாரண வகை 60 ரூபாயில் இருந்து 64 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 120 ரூபாயில் இருந்து 170 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது. விற்பனை எண் 47-க்கான ஏலம் வருகிற 21, 22 கிய நாட்களில் நடக்கிறது. ஏலத்திற்கு மொத்தம் 16 லட்சத்து 79 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.

**தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் மழை**

தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் நேற்று காலை முதல் விட்டுவிட்டு மழை பெய்தது.

<u>தஞ்சாவூர்</u>

வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை நாகை அருகே கரையை கடந்தது. இருந்தாலும் தொடர்ந்து மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்தது. தஞ்சையில் நேற்றுமுன்தினம் மழை பெய்யவில்லை. நேற்றுகாலை வழக்கம்போல் வெயில் அடித்தது. ஆனால் நேரம் ஆக, ஆக வெயில் குறைந்து வானம் மேகமூட்டமாக காணப்பட்டது.

காலை 11 மணிக்கு மேல் லேசாக மழை பெய்ய தொடங்கியது. இந்த மழை சிறிது நேரம் நீடித்தது. பின்பு இடை இடையே மழை தூறுவதும், நிற்பதுமாக இருந்தது. பிற்பகல் நேரத்தில் 15 நிமிடம் பலத்த மழையாக பெய்தது.

<u>திருவாரூர்</u>

திருவாரூரில் நேற்று அதிகாலையிலேயே மழை பெய்ய தொடங்கியது. சாரலாக விழுந்த மழை தொடர்ந்து 4 மணி நேரத்திற்கும் மேலாக நீடித்தது. காலை நேரத்தில் பெய்த மழையால் மாணவ, மாணவிகள் பள்ளி, கல்லூரிகளுக்குச் செல்வதற்கு சிரமப்பட்டனர். தொடர்ச்சியாக சாரல் மழை பெய்ததால், கடைவீதியில்

வழக்கத்துக்கு மாறாக மக்கள் கூட்டம் குறைவாக காணப்பட்டது. மதிய நேரத்தில் சிறிது நேரம் மழை விட்டபோது பஸ் நிலையம், கடைவீதி உள்ளிட்ட பகுதிகளில் மக்கள் கூட்டம் காணப்பட்டது. ஆனால் சிறிது நேரத்தில் மீண்டும் மழை பெய்ய தொடங்கியது. இந்த மழை மாலை வரை நீடித்ததால் பள்ளி வகுப்பு முடிந்து வீடு திரும்பிய மாணவ, மாணவிகள் நனைந்தபடி சென்றனர். திருவாரூரை போல மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி உள்ளிட்ட மாவட்டத்தின் மற்ற பகுதிகளிலும் நேற்று பரவலாக மழை பெய்தது.

நாகப்பட்டினம்

நாகையில் நேற்று அதிகாலை முதல் பலத்த மழை பெய்தது. இடையிடையே தூறலாகவும், பலத்த மழையாகவும் பெய்தது. இதனால் நேற்று நாகை முழுவதும் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. நேற்று நாகையில் பெய்த பலத்த மழைக் காரணமாக சாலைகளில் தண்ணீர் ஆறுபோல் ஓடியது.

மேலும் நாகையில் பாதாள சாக்கடைத் திட்டத்தின் மூலம் சாலையில் தோண்டப்பட்டுள்ள பள்ளங்களில் ஆங்காங்கே தண்ணீர் தேங்கி நின்றது. இதனால் வாகன ஓட்டிகள் சிரமப்பட்டு வாகனங்களை ஓட்டிச் சென்றனர். இந்த மழையிலும் நாகையில் பள்ளி மாணவ, மாணவிகள் நனைந்தப்படி பள்ளிகளுக்கு சென்றனர். மயிலாடுதுறை, சீர்காழி, தரங்கம்பாடி, மணல்மேடு, கொள்ளிடம் ஆகிய பகுதிகளிலும் பலத்த மழை பெய்தது.

**கும்பகோணம் பகுதியில் கோமாரி நோயால் இறந்த மாடுகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் அன்பழகன் எம்.எல்.ஏ.வலியுறுத்தல்**

கும்பகோணம் பகுதியில் கோமாரி நோய் தாக்கி இறந்த மாடுகளுக்கு தமிழக அரசு உடனடியாக இழப்பீடு தொகை வழங்க வேண்டும் என்று அன்பழகன் எம்.எல்.ஏ. வலியுறுத்தி உள்ளார்.

கும்பகோணம் தொகுதி எம்.எல்.ஏ.அன்பழகன் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

வருமுன்காப்போம் திட்டம்

தி.மு.க. தலைவர் கருணாநிதி தனது ஆட்சிக்காலத்தில் வருமுன் காப்போம் என்ற அரிய திட்டத்தினை செயல்படுத்தி அனைத்து கிராமங்களிலும் முகாம்கள் நடத்தி

பொதுமக்களுக்கு நோயின் தன்மையை முன்னரே அறிந்து அதற்கான தகுந்த சிகிச்சையளித்து அந்த திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தினார்.

நோயை வெளியில் சொல்ல முடியாத கால்நடைகளுக்கும் அத்திட்டத்தினை விரிவுபடுத்தி கிராமங்கள் தோறும் முகாம்கள் நடத்தி நோய் வருவதற்கு முன்பே தடுப்பூசிகளை போட்டு கால்நடைகளை காப்பாற்றினார்.

இழப்பீடு

தற்போது கும்பகோணம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பெரும்பாலான பகுதிகளில் தீவிரமாக கோமாரி நோய் பரவி வருகிறது. கும்பகோணம் பகுதிக்கு உள்பட்ட தாராசுரம், சோழபுரம், சாக்கோட்டை, இன்னம்பூர், பழவத்தான்கட்டளை, வாளபுரம், ஏரகரம் உள்ளிட்ட பகுதிகளில் கோமாரி நோயினால் சுமார் 500 மாடுகள் வரை இறந்துள்ளன.

இந்த நோயின் அறிகுறி தென்பட்டவுன் 2 மாதங்களுக்கு முன்பே முன் எச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டு கிராமங்கள் தோறும் தடுப்பூசி போட்டிருந்தால் இந்த கால்நடைகள் இழப்பை தடுத்து நிறுத்தியிருக்கலாம்.

எனவே தமிழக அரசு உடனடியாக இறந்த கால்நடைகளுக்கு இழப்பீடாக ஒரு கால்நடைக்கு ரூ. 50 ஆயிரத்திற்கும் குறையாமல் இழப்பீடு தொகை வழங்க வேண்டும். மேலும் இருக்கின்ற கால்நடைகளை காப்பாற்ற அரசு தடுப்பூசி மற்றும் தகுந்த சிகிச்சையினை போர்ககால அடிப்படையில் அளிக்க வேண்டும்.

**ஊத்தங்கரை பகுதியில் கோமாரி நோய் பாதிப்பு குறித்து கலெக்டர் நேரில் ஆய்வு**

கிருஷ்ணகிரி, -

ஊத்தங்கரை பகுதியில் கோமாரி நோய் பாதிப்பு குறித்து நேரில் ஆய்வு செய்த மாவட்ட கலெக்டர் டி.பி.ராஜேஷ், நோய் தடுப்பு பணியை தீவிரப்படுத்தும்படி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

**நேரில் ஆய்வு**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் கோமாரி நோயால் 50-க்கும் மேற்பட்ட மாடுகள் இறந்துள்ளன. மேலும் 100-க்கும் மேற்பட்ட

மாடுகள் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதிகளில் கோமாரி நோயை கட்டுப் படுத்த மாவட்ட நிர்வாகம் சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஊத்தங்கரை அருகே உள்ள நாட்டாண்மைக் கொட்டாய், புதுக்காடு ஆகிய கிராமங்களுக்கு மாவட்ட கலெக்டர் டி.பி.ராஜேஷ் நேரில் சென்று ஆய்வு நடத்தினார். இந்த ஆய்வில் மாவட்ட வருவாய் அலுவலர் பாலசுப்பிரமணியன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மந்திராசலம், கிருஷ்ணகிரி உதவிக் கலெக்டர் லதா, கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் ராஜேந்திரன் உள்ளிட்டோரும் உடன் சென்றார்கள். பின்னர் அதிகாரிகளுடன் கலெக்டர் ஆலோசனை நடத்தினார். அப்போது அவர் கூறிய தாவது:-

## நோய் தடுப்பு குழு

ஊத்தங்கரை வட்டத்தில் கோமாரி நோய் தடுப்பு சிகிச்சை அவசரகால முன்னெச்சரிக்கை நடவடிக்கைக் காக 7 குழுக்களும், நோய்தடுப்பு நடவடிக்கைகளுக்காக 15 குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுக்களில் கால்நடை உதவி மருத்துவர்கள், கால்நடை ஆய்வாளர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இந்த குழு அலுவலர்கள் தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கிராமங்களில் தினமும் தவறாது நேரில் சென்று கோமாரி நோய் தடுப்பூசிகள் போடவேண்டும். மற்றும் ஏற்கனவே தடுப்பூசி போடப்பட்டுள்ள கால்நடைகளின் விவசாயிகளிடம் மாட்டுக் கொட்டகைகள் மற்றும் கால்நடைகள் பராமரிக்கும் இடங்களில் தினந்தோறும் பிளீச்சிங் பவுடர் தூவிவிட வேண்டும். கால்நடைகள் உள்ள இடங்கள் சுத்தமாகவும், தூய்மையாகவும் பராமரிக்கப்பட வேண்டும். கோமாரி நோய் தடுப்பு பணியை தீவிரமாக மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## பிளீச்சிங் பவுடர்

இந்தநிலையில் நேற்று ஊத்தங்கரை பேரூராட்சிக்கு உட்பட்ட 15 வார்டு பகுதி களிலும் பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் தெய்வ நாயகம், பேரூராட்சி தலைவர் பூபதி, செயலாளர் சந்திரசேகரன் மற்றும் பணியாளர்கள் வீதி வீதியாக சென்று கால்நடைகளின் கொட்டகைகளை பார்வையிட்டு, பிளீச்சிங் பவுடர் தெளித்தனர். மேலும் நோய் அறிகுறி உள்ள கால்நடைகளுக்கு உடனடியாக

சிகிச்சையளிக்கவும், மற்ற மாடுகளுக்கு தடுப்பூசி போட்டுக் கொள்ளவும், கால்நடை வளர்ப்போரை கேட்டுக் கொண்டார்கள். கறவை மாடுகளுக்கு தடுப்பூசி போட்டால் பால் குறைந்துவிடும் என்று தடுப்பூசி போடாமல் இருக்கக் கூடாது என்றும் அறிவுறுத்தினர்.

**காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால் கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டங்களில் மழை கொட்டி தீர்த்தது**

கிருஷ்ணகிரி,-

வங்க கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 609 மில்லி மீட்டரும், தர்மபுரி மாவட்டத்தில் 469 மில்லி மீட்டரும் மழை கொட்டி தீர்த்தது.

**<u>புயல் மழை</u>**

வங்க கடலில் மையம் கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக மாறி நேற்று நாகை அருகே கரையை கடந்தது. இதையொட்டி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நேற்று அதிகாலை முதலே பரவலாக தொடர் மழை பெய்தது. அதிகாலை 5 மணிக்கு தொடங்கிய மழை மறுநாள் அதிகாலை வரை பெய்து கொண்டே இருந்தது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. சாலைகளில் மழைநீர் தேங்கி நின்றது. பாதாளச்சாக்கடை திட்டம், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக குழிகள் தோண்டப்பட்டு, சீரமைக்கப்படாமல் உள்ள சாலைகள் அனைத்தும் இந்த மழையால் சேரும் சகதியுமானது. இதனால் வாகன ஓட்டிகள் சிரமப்பட்டனர். சாலையில் நடந்து செல்வோரும் பாதிக்கப்பட்டார்கள். வியாபாரமும் பாதிக்கப்பட்டது. கிருஷ்ணகிரி அணை மற்றும் சுற்றுவட்டாரப்பகுதிகளில் நெல் அறுவடைப்பணி மழையால் பாதிக்கப்பட்டது. விளைந்த கதிர்கள் சாய்ந்து மழை நீரில் மூழ்கியது.

**<u>அதிக பட்ச மழை</u>**

இந்தநிலையில் நேற்று காலை 8.30 மணி வரையிலான ஒரு நாள் நிலவரப்படி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிகபட்சமாக ஊத்தங்கரை பகுதியில் 94.20 மில்லி

மீட்டர் மழை பதிவாகியுள்ளது. மற்ற இடங்களில் பெய்த மழையளவு வருமாறு:-
(மில்லி மீட்டரில்)

பாரூர்-79.80, தேன்கனிக்கோட்டை-25, ஓசூர்-14, கிருஷ்ணகிரி-48, அஞ்செட்டி-30, தளி-20, பெணுகொண்டாபுரம் -85.40, சூளகிரி-15, நெடுங்கல் -72.40, ராயக்கோட்டை-34, போச்சம்பள்ளி-91.30. ஆகும். மாவட்டம் முழுவதும் மொத்தம் 609.10 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. சராசரி அளவு 50.76 மி.மீ ஆகும்.

**<u>தர்மபுரி</u>**

தர்மபுரி மாவட்டத்தில் நேற்று அதிகாலை முதல் நள்ளிரவு வரை மழை தொடர்ந்து பெய்து கொண்டே இருந்தது. அவ்வப்போது ஒரு சில இடங்களில் லேசான காற்றுடன் கனமழை பெய்தது. இதனால் சாலைகளில் மழை நீர் ஓடி தாழ்வான பகுதிகளில் குளம் போல் தேங்கி நின்றது. இந்த மழையினால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு பெரும்பலானோர் வீட்டிலேயே முடங்கி கிடந்தனர். மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் பெய்த மழையால் அணைகள், கசிவுநீர் குட்டைகள், ஏரிகள், குளங்கள், கிணறுகளில் நீர்மட்டம் அதிகரித்துள்ளது.

**<u>அரூரில் கூடுதல் மழை</u>**

மாவட்டத்தில் நேற்று சராசரியாக 67.13 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. மாவட்டம் முழுவதும் 469.90 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது. அரூர் பகுதியில் அதிகபட்சமாக 104.50 மில்லி மீட்டர் மழையும், குறைந்தபட்சமாக ஒகேனக்கல் பகுதியில் 41 மில்லி மீட்டர் மழையும் பெய்துள்ளது. மாவட்டம் முழுவதும் பெய்த மழை அளவு விவரம் மில்லி மீட்டரில் வருமாறு:- தர்மபுரி-81, அரூர்-104.50, பாப்பிரெட்டிப்பட்டி-61, பாலக்கோடு-66.40, பென்னாகரம்-56, ஒகேனக்கல்-41, மாரண்டஅள்ளி-60, தர்மபுரி கலெக்டர் அலுவலகம்-90.

மாவட்டம் முழுவதும் நேற்று ஒரே நாளில் பெய்த இந்த தொடர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கடந்த மாதம் பெய்த மழையின் போது விவசாயிகள் உழவு மற்றும் நடவுப்பணிகளை மேற்கொண்டனர். தற்போது பெய்துள்ள மழை பயிர் விளைச்சலுக்கு பெரிதும் பயன்படும் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.